When, only The best is Good Enough

Buy Solide Pumps

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ 2/-

தரமானதே சிறந்தது என்றால்

சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடி 31 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 01 (15 08 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 157

### வடக்கு, கிழக்கு தபாலகங்களில்

# பார்சல்களை ஏற்க தொடர்ந்து தடை!

## மீளாய்வுக் கோரிக்கை நிராகரிப்பு!!

- அலுவலகச் செய்தியாளர்: அகில்ராஜ் -

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 15

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தபாலகங்களில், பார்சல்களை ஏற்றுக்கொள்வதற்கு விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து அமுலில் இருக்கும். அது கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும்.

1984 ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட இந்தத் தடை உத்தரவை மீளாய்வு செய்து, அதனை நீக்குமாறு விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது.

மறு அறிவித்தல் வரை, தமிழ்ப் பகுதித் தபாலகங்களில் பார்சல்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது என மீண்டும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

1984 ஆம் ஆண்டில் தபால் மூலம் அனுப்பப்பட்ட பார்சல்களுக்குள் வைத்த குண்டுகள் ரயிலிலும் பெரிய தபாற் கந்தோரிலும் வெடித்த சம்பவங்களைத் தொடர்ந்து வடக்கு, கிழக்குத் தபாலகங்களில் பார்சல்களை ஏற்றுக்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

இதனால் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தது. இங்குள்ள அரசாங்க அலுவலகங்களும் பல சிரமங்களை எதிர்நோக்கின.

இவற்றைத் தொடர்ந்து—

வடபகுதியில் உள்ள அரச அலுவலகங்கள், பல்கலைக் கழகம் போன்ற ஸ்தாபனங்கள் பார்சல்களை மீண்டும் தபால் மூலம் அனுப்ப வசதி செய்யுமாறு யாழ்ப்பாணம் தபாற் பகுதியிடம் கோரிக்கை விடுத்தன.

இது தொடர்பாக யாழ்-தபால் திணைக்கள உயரதிகாரிகள் கொழும்பு தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு தடை உத்தரவை மீளாய்வு செய்யுமாறு கேட்டிருந்தனர்.

மீளாய்வுக் கோரிக்கையை நிராகரித்த தலைமையகம், முந்திய தடை உத்தரவைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தி தெரிவித்திருக்கிறது. (அ-10)

### முச்சந்தி முரளி



தேர்தல் இன்னும் நிச்சயமானதாகத் தெரியயில்லை.... அதுக்கிடையில மூண்டு பேரும் அடிபடத் துடங்கியிட்டினம் பாத்தியளே ..! பதவி ஆசை ஆரைத்தான் விட்டு வைக்குது ஐயா... !

### நீண்ட இடைவெளியின் பின்னர்

## வர்த்தக ஊழியருக்கு வாராந்த ஓய்வு நாள்!

### நேற்றுக் கடைகள் பூட்டு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 15

நீண்டகால இடைவெளியின் பின்னர், யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு அங்கு கடமையாற்றும் ஊழியருக்கு வாராந்த ஓய்வுநாள் வழங்கப்பட்டது.

அரச சாப்புச் சட்டத்தின் கீழ் கடந்த பல வருடங்களுக்கு முன் ஞாயிற்றுக்கிழமைகளில் சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு ஊழியர்களுக்கு வாராந்த ஓய்வு வழங்கப்பட்டு வந்தது.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள், பதற்றங்கள் காரணமாக இந்நிலை மாறியது.

எனினும் வியாபாரத்தை பொறுத்தவரை ஓரளவு சகஜநிலை தோன்றியதை அடுத்து மீண்டும் நேற்று ஞாயிற்றுக்கிழமை சகல

(8 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்று கல்வித் திணைக்களத்தில்

## ஆரம்ப ஆசிரியர்களின் 346 பெயர்கள் பதிவு

யாழ்ப்பாணம், ஆக 15

நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தின் ஆரம்ப ஆசிரிய பதவிக்கு 346 பேர் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொண்டனர்.

இந்த 346 பேரும் ஊர்காவற்றுறை, உடுப்பிட்டி, பருத்தித்துறை, காங்கேசன் துறை, வட்டுக்கோட்டை ஆகிய 5 பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்.

நேற்றைய தினம் கல்விச் சேவை ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்ட உத்தரவுக் கடிதங்களை சமர்ப்பித்து பதிவு செய்துகொண்ட அனைவருக்கும் சேவைக்கால முன்பயிற்சிக்கான அறிவுறுத்தல்களும் விவரங்களும் அடங்கிய கடிதங்களை பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் வழங்கினார்.

இக்கடிதத்தில் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்ட பாடசாலையும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கமைய சைவ உணவருந்தும் மகளிர் பயிற்சியினருக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியும் ஆண், பெண் இரு

(8ஆம் பக்கம் பார்க்க)

### உண்ணாவிரதம்: ஆதரவு தெரிவித்து சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஆக. 15

பூஸா தடுப்பு முகாமில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து நகரின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

"அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய்" என்ற வாசகம் இந்த சுவரொட்டிகளில் காணப்படுகிறது.

இந்தச் சுவரொட்டிகளை, பூஸாவில் உள்ள கைதிகளின் சகோதரர்களும், நண்பர்களுமே வெளியிட்டுள்ளதாகவும் அந்த சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-9)

### ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளர்:

# காமினி, லலித்தை விட பிரேமாவுக்கே அதிக வாய்ப்பு!

கொழும்பு, ஆக 15

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன போட்டியிடாத பட்சத்தில், பிரதமர் பிரேமதாஸாவுக்கே ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் கிடைக்கும் வாய்ப்பு அதிகரித்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீண்டும் போட்டியிடுவதா? இல்லையா? என்பதை ஜனாதிபதி ஜெயவர்த்தன இம்மாத இறுதிக்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற் குழுவுக்குத் தெரியப்படுத்தி விடுவார் என்றும் அறிய வந்துள்ளது.

செயற்குழு இம்மாதம் 29 ஆம் திகதி கூடும்.

இதனிடையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை எதிர்ப்பின்றி, அனைவரின் சம்மதத்துடன்பாட்டுடன் தெரிவு செய்யும் முயற்சியில் கட்சித் தலைவர் ரஞ்சன் விஜயரத்ன ஈடுபட்டிருப்பதாக "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டுள்ளது.

இது சம்பந்தமாக மாற்றுத்திட்டம் ஒன்று ஜனாதிபதி வேட்பாளராக வர முயற்சிப்பவர்களான பிரதமர் பிரேமதாஸ, அமைச்சர்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### தந்தையின்

## மரணச் சடங்கிற்கு வீடு வந்த மகனும் அங்கேயே மரணம்!

மட்டக்களப்பு, ஆக. 15

தந்தையின் மரணச் சடங்குக்காக வந்த மகனும் வீட்டிலேயே மரணமானார்!

தந்தையின் மரணச் சடங்குக்காக வீட்டுக்கு வருகை தந்த மகன் அங்கு வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் அண்மையில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஆரையம்பதியில் நடைபெற்றது.

ரூஸ் எனப்படும் எம். ஆனந்தராச முதலி (வயது 40) என்பவரே கொலையுண்ட நபராவார்.

நாரில் நண்பரொருவர் வீட்டில் வசித்து வந்த ஆனந்தராசா தந்தையின் மரணச்செய்தி கேட்டு ஆரையம்பதியில் உள்ள வீட்டிற்குச் சென்றார்.

மரண வீட்டில் இரு நபர்கள் இவரை அழைத்து நேருக்கு நேர் துப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடிவிட்டனர். அவர் அந்த இடத்திலேயே மரணமானார். (ஒ-21)

### இரண்டாவது ஜவானும் மரணம்

யாழ்ப்பாணம், ஆக 15

சனிக்கிழமையன்று, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமுற்ற இந்திய அமைதிப் படை ஜவானும் மரணமானதாக அறிவிக்கப்பட்டது.

இச் சூட்டுச் சம்பவம் நடந்த இடத்திலேயே ஒரு ஜவான் ஏற்கனவே மரணமானது தெரிந்ததே. (அ)

### யாழ். தபால் நிலையத்துக்கு

## இரண்டு 'லைன்கள்' ஆனால் தொலைபேசி ஒன்று!

யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் ஒரேயொரு தொலைபேசி மட்டுமே கொழும்பு - யாழ்ப்பாணம் நேரடித் தொலைபேசிச் சேவைக்காகப் பொருத்தப்பட்டுள்ளது.

இரண்டு 'லைன்கள்' இங்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் ஒரு 'லைனுக்கு' மட்டுமே தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் யாழ். தபால் நிலையத்தில் தொலைபேசி எடுக்க வரும் மக்கள் பல மணி நேரம் கால் கடுக்க நிற்க வேண்டிய கஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். தொலைத் தொடர்புத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அடுத்த தொலைபேசியை பொருத்த இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று தபாலக அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

## படகுப் பிரயாணிகளுக்கு கிடைத்த சாராய விருந்து!

நெடுந்தீவு, ஆகஸ்ட் 15

குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கு கடந்த சனிக்கிழமை பயணம் செய்த கடற் பிரயாணிகளுக்கு புது அனுபவமும், புதிய காட்சியும் கிடைத்தன!

ஆம் பிரயாணிகளில் மது அருந்தும் பலருக்குத் தாராளமாகச் சாராயம் விநியோகித்தனர் ஸ்ரீலங்கா கடற்படையினர். அதுமட்டுமன்றி பல போத்தல் சாராயம் கடலுக்கு "அபிஷேகம்" செய்யப்பட்ட காட்சியையும் பிரயாணிகள் பார்க்க முடிந்தது.

நயினாதீவு கடற்படைப் பரிசோதனை முகாமில் இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நெடுந்தீவுக்குச் சட்ட விரோதமாகச் சாராயம் கடத்தப்படுவது குறித்து அடிக்கடி எச்சரித்து வந்த ஸ்ரீலங்கா கடற்படையினர்—

சனிக்கிழமை அன்று சொந்தங்கொண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் - கொழும்பு சொகுசு பஸ் சேவை

### வ. பி. போ. ச. ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம், ஆக 15

யாழ்ப்பாணம் — கொழும்பு பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கென நான்கு புதிய "சொகுசு" பஸ்களை வழங்குமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபை, போக்குவரத்து அமைச்சரைக் கோரியுள்ளது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் பின்னர் சில நாட்கள் நடைபெற்ற கொழும்பு - யாழ் பஸ் சேவை பின்னர் நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக நிறுத்தப்பட்டன.

எனினும் மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து யாழ் - கொழும்பு சேவையை நடத்துவதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

தற்பொழுது கையிருப்பில் உள்ள பஸ்கள் யாழ்-கொழும்பு சேவைக்கு உகந்தவை அல்ல என்றும் அதனால் புதிய

(8ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவுக்கு அப்பால்

# தென்பகுதி எங்கும் ஹர்த்தால்

## ஜே. வி. பி. இயக்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 15

வவுனியாவுக்கு அப்பால் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் ஹர்த்தால் நடத்தப்போவதாக ஜே. வி பி. யினர் அறிவித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இது சம்பந்தமான சுவரொட்டிகள் தென்னிலங்கைப் பகுதி எங்கும் ஒட்டப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்தது.

இத்தினங்களில் கடைகளை மூடுமாறும், போக்குவரத்துச் சேவைகளை நிறுத்துமாறும் ஜே.வி.பி.யினர் சுவரொட்டிகள் மூலம் தெரிவித்துள்ளனர்.

அரச அலுவலகங்கள், தனியார் அலுவலகங்கள் எதுவும் இயங்கக்கூடாது எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

சுவரொட்டி எச்சரிக்கையை அடுத்து தென்னிலங்கைப் பகுதி எங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை ஆயுதப் படையினர், பொலிஸார் உஷார்படுத்தப்பட்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா தெரிவித்தார்.

அரச அலுவலகங்கள் திறந்து இருக்கும், அரசு தனியார் போக்குவரத்து பஸ் சேவைகள் வழமை போல் இரண்டு தினங்களும் நடைபெறும் என்றும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இதனிடையில் டெ

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தேர்தலுக்கான ஆயத்த வேலை ஆரம்பம்

கொழும்பு, ஆக 15

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்த வேலைகள் ஆரம்பமாகிவிட்டன என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா அறிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி தேர்தல் டிசம்பர் 4 ஆம் திகதியில் இருந்து ஜனவரி 2 ஆம் திகதிக்கு முன்னதாக நடக்கலாம் என்று ஹேஸ்யம் தெரிவிக்கப்படுகின்றது.

எப்படியாயினும் மூன்று தேர்தல்களை நடத்துவதற்கான சகல முன்னேற்பாடுகளையும் தேர்தல் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகவும்—

ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தல் ஆகியனவே அவை-என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்ததாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-எ)

### சுபநேரம்

15 – 08 – 88
ஆடி — 31
திங்கட்கிழமை
சுபநேரம்:
12 05முதல் 01.35வரை
ராகுகாலம்:
07.35முதல் 09.05வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### 1983க்கு பின் பதவி இழந்த

## ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு?

யாழ்ப்பாணம், ஆக 15

வன்செயல் காரணமாக 1983 ஜூலைக்குப் பின்னர் இன்று வரை வேலைக்குச் சமுகமளிக்காததால் பதவி இழந்த ஆசிரியர்களுக்கு மீண்டும் விரைவில் வேலை வாய்ப்புக்கு வசதி செய்யப்படக் கூடும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ள கடிதம் ஒன்றில், சங்கத்தின் ஆலோசனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தீவிரமாக ஆலோசித்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சிலிருந்து இம்மாதம் இரண்டாம் திகதியிட்டு அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றில், கடமைக்குச் சமுகமளிக்காத ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட வேலை நீக்க உத்தரவுகளை வாபஸ் பெறுவது குறித்துத் தீவிரமாக ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக சங்கச் செயலாளர் திரு.

(8 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

றீக்கொண்டிஷன், ஹொண்டா C 50, C 70 C 90, Racoon விற்பனைக்கு உண்டு. திருவாசி, ஸ்தூபி, பெரியமணி, குத்துவிளக்கு, Sports Cups மற்றும் கோயில் பொருள்களும், கிடைக்கும் இடம் ஸம்ஸ் 26/B. மானிப்பாய் வீதி, கிளை:- 76/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(5653)

### TOEFL

TOEFL பரீட்சைக்கான Barons, Arcos, Kits ஆகியவற்றின் பதிவு செய்யப்பட்ட கசற்றுக்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு "சிவாஜி லஷ்மீஸ்", Audio Division, 19, Brown Road, Jaffna.
(5727)

### SALE

Brand new De Freezer. Small. Italey made. Yarltan Stores 119, K. K. S road, Kokuvil.
(5689)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும். (விசேட சழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(C6107)

### தளபாட விற்பனையும் கொள்வனவும்

மரக் கடைச்சல வேலைக்கும் நிலை, யன்னல், கதவு மரத் தளபாடங்கள் ஓடருக்கு செய்வதற்கும் உடனடியாக வாங்குவதற்கும் விற்பதற்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். (1) மகாலக்ஷ்மி ரேட் குறூப், 29, அராலி வீதி, யாழ்ப்பாணம். (2) 75. மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்.
(5679)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Cull Birds முட்டை இட்டு இளைத்த இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் தரப்படும். Nallur Farm Centre, C/o Nallur Video Centre, 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.
(5068)

### கோழிக்குஞ்சு விநியோகம்

26-8-88 வெள்ளிக்கிழமை ஒருநாள் Hy-line கறுப்பு, வெள்ளை, பேட்டுக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். மற்றும் இங்கே கோழிக்குத்தடுப்பூசி போடும் சேவை, கோழி, கால்நடை மருந்து வகைகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம். டாக்டர் பொ. சந்தசாமி, மிருக வைத்தியர், 68, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
(5735)

### தேவை

எமது கல்வி நிறுவனத்திற்கு ஒரு பெண் லிகிதர் தேவை. ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து தெரிந்தவராய் இருத்தல் வேண்டும். விரும்பியோர் கல்வித் தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 178, C/o உதயன் யாழ்ப்பாணம்.
(5723)

## தேவை

நல்ல நிலையிலுள்ள மொறிஸ் மரீனு (Morris-Marina) அல்லது டொயாற்றோ கொறலா (Toyata Corolla) கார் தேவை. தொடர்பு:- J. P. T. Ltd 3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். (5684)

எமது ஸ்தாபனத்திற்கு வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை. வயதெல்லை. 20 முதல் - 25 வரை தகைமைச் சான்றிதழ்களுடன் 22-08-1988 முன் நேரில் தொடர்பு கொள்ளவும் S. நடராசா, சேச் றேட். சங்கானை.
(5741)

### பதவி வெற்றிடம்

கோழிப்பண்ணை பராமரிப்பதற்கும், தோட்ட வேலைக்கும் ஆண்கள் தேவை. 18-8-88 அன்று காலை 10 மணிக்கு, 'சீமாட்டிரெக்ஸ்ரைல்ஸ்' யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும். (சீமாட்டி பாம், மைலங்காடு, சுன்னாகம்- Farm Address.)
(5680)

## வாடகைக்கு

### வீடு வாடகைக்கு

நாச்சிமார் கோவிலடி நவாலி வடக்கு மானிப்பாயில் 3 பரப்புக் காணியும் சகல வசதிகளும் கொண்ட கல்வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி - இ. வேலாயுதம், சந்தை ஒழுங்கை, தெல்லிப்பழை. (5688)

## கல்வி

Spoken English with Grammar வார இறுதி வகுப்பு ஆரம்பம் 20-8 88 சனி / ஞாயிறு நாட்களில். பிற்பகல் 3 மணி-5 மணி Advanced English புதிய பிரிவு ஆரம்பம் 20-8-88 காலை 8 மணி — 10 மணி சனி/ ஞாயிறு நாட்களில். S B Iyar. 12, வைமன் வீதி, நல்லூர். (5736)

### புதியபாடல் பதிவு செய்தல்

புதியபாடல்கள் பதிவு செய்ய இன்றே நாடுங்கள். "பரத் வீடியோ சென்ரர்" எமது புதிய இசைத்தட்டுக்கள்:- இது நம்ம ஆளு; மேளம் கொட்டு தாலி கட்டு; ஜீவா, தம்பி தங்கக் கம்பி; என் தங்கச்சி படிச்சவ; பாட்டி சொல்லைத் தட்டாதே; நான் சொன்னதே சட்டம்; கிராமத்துக் கிளி (L.P) விலாசம்:- 51/1, சன்னதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (5690)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகலவிதமான றேடியோ வீடியோ டெக், T. V., மின்விசிறிகள், மின் அடுப்புக்கள், மின் மோட்டர்கள், அயர்ன்கள், சுமீற் மொலினெக்ஸ் கிரைன்டர்கள், எலக்ரோனிக் சல்குலேட்டர், சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடுங்கள்: விக்ரர் அன் சன்ஸ் (விக்ரேஸ்) 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/ 6051)

# மாவை விக்டரி விளையாட்டுக் கழக அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

12-8-88ந் திகதி நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுகள் பெறும் சீட்டு இலக்கங்கள் பின்வருமாறு:-

| | ஆறுதல் பரிசுகள் | |
|---|---|---|
| | 2997 | 2459 |
| 1ஆம் பரிசு — 0846 | 0272 | 3608 |
| 2ஆம் பரிசு — 2983 | 3410 | 3545 |
| 3ஆம் பரிசு — 4162 | 4174 | 1189 |
| | 2522 | 0402 |

இப்பரிசுகளுக்குரிய அதிர்ஷ்டசாலிகள் தகுந்த ஆதாரங்களுடன் 15-9-88 ஆந் திகதிக்கு முன்பதாக எமது கழகப் பொருளாளருடன் தொடர்பு கொண்டு தங்கள் பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மாவை விக்டரி விளையாட்டுக்கழகம்,

முகவரி:

திரு. கு. குகானந்தன்,
(பொருளாளர்)
கீரிமலை வீதி, மாவிட்டபுரம்.
1988-08-13. (5738)

# ✶ எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) கபில்தேவ் விஜி அகல்யா "கல்லூரிக் கனவுகள்"

(2) சிவச்சந்திரன் சத்தியகலா "மனைவி ஒரு தீபம்"

(3) சுருளிராஜன் லாவண்யா "சரோஜா"

அடுத்த வெளியீடு:-

K. பாக்கியராஜின் "இது நம்ம ஆளு"

தணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C6196)

# தேசிய உப்புக் கூட்டுந்தாபனம் ஆனையிறவு அறிமுகப்படுத்தும் புதிய விற்பனை

சுத்தமான 900 கிறும் எடையுள்ள கைக்கு அடக்கமான பைக்கட்டுக்களில்

★ கழுவிய உப்பு ★

மொத்த விலை—
[500 பைக்கட்டுகளுக்கு மேல்]
பைக்கட் ஒன்று ரூபா 1. 55
சில்லறை விலை —
[ஆகக் கூடிய விலை]
பைக்கட் ஒன்று ரூபா 2. 40

இல்லத்தரசிகளின் உள்ளம் குளிர

இன்றே வாங்குங்கள்
கூட்டுத்தாபனம் வழங்கும்
கழுவிய உப்பு

அறிமுக விற்பனை உடன் ஆரம்பம்

கொள்வனவு முறை சந்தைப்படுத்தல் விபரங்களுக்கு

தொடர்பு கொள்க:

வட பிராந்திய முகாமையாளர்,
தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்,
ஆனையிறவு.
C-6143]

# 50ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



செல்வன்
சிவபாதசுந்தரம் - கலாதீபன்
(கலா)

ஆண்டவன் படைப்பு: 16- 12- 1966 | அநியாய அழிப்பு: 28- 06- 1988


எங்கள் இதயத்தில் இன்றும் நோவு விருக்கும் அன்புச் செல்வமே! நீ எம்மை விட்டுப் பிரிந்தாலும் உன் நினைவு எம் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது. எங்களைத் தீராத துன்பத்தில் மூழ்க வைத்துவிட்டு நீ எங்கு சென்றாய்? உன ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

15- 8- 88 ஆம் திகதி திங்கட்கிழமை கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், 16- 08- 88ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு மிகப் பணிவுடன் அழைக்கின்றோம்.

'கமலபவனம்'
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

உன் பிரிவால் துயருறும்
தாய், தந்தை,
அண்ணன்மார், அக்கா
(C/ 6202)

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



திரு. விசுவநாதர் பொன்னம்பலம்
(கட்டிடத்திணைக்களம் — யாழ்ப்பாணம்)

தோற்றம்: 21-1-1937 | மறைவு: 16-7-1988

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய் கடமையில் கண்ணியமாய் நேர்மையின் இலக்கணமாய் வாழ்ந்தீர்! திடீரென எம்மையெல்லாம் பரிதவிக்க விட்டு மறைந்து விட்டீர். உம் இனிய நினைவுகள் எம் நெஞ்சை விட்டு என்றும் அகலாது. உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரது இறுதிச் சடங்குகளில் சமுகந் தந்து பங்குபற்றியவர்களுக்கும் தந்தி அனுப்பி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையம் அணிவித்து கௌரவித்தவர்களுக்கும் மற்றும் பலவகையான உதவி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி: பத்மதேவி,
புதல்வர்கள்: காங்கேயன், பிரதீபன்.
சகோதரங்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், மருமக்கள்.

பாவிட்டபுரம் தெற்கு,
தெல்லிப்பழை. (5734)

# மரியன்னை ஆசி நிறைக

நவாந்துறை புனித பரலோக மாதா தேவாலய வருடாந்த திருநாள் உற்சவத்தை முன்னிட்டு—

நவாந்துறை பங்குத் தந்தை வண. சாள்ஸ் ஜீ செந்தில்வேல், O M I விடுத்த ஆசிச் செய்தி வருமாறு:-

புனித மரியன்னையின் விண்ணேற்பு விழாவைக் கொண்டாடும் இன்றைய நன்நாளில் இப் பங்கில் இயங்கி வரும் சென். மேரிஸ் சனசமூக நிலையம் புனித மரியன்னையின் மகிமையின் நிமித்தம் சிறப்பு மலரை வெளியிடுவதையிட்டு நான் பெருமகிழ்வு கொள்ளுகின்றேன்.

புனித மரியன்னையின் ஆண்டு நிறைவெய்தும் இந் நாளில் அன்னையின் அருங்குணங்களையும், நற்பண்புகளையும் அவள் காட்டிய வழிகளையும் பின்பற்றி வாழ்வதே நாம் அன்னைக்குச் செய்யும் நன்றியாகும்.

அன்னையின் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடும் இப் பங்கு மக்களுக்கும் சிறப்பாக சேவையாற்றி வரும் சனசமூக நிலையத்துக்கும் புனித மரியன்னையின் நிறைவான ஆசி கிடைக்க வேண்டுகின்றேன்.

புனித மரியன்னையின் ஆசிர் யாவர்க்கும் நிறைக.

(3 ஆம் பக்கமும் பார்க்க)

# நொதேண்

(சுண்டிக்குளி)

## வர்த்தகம் புதிய பிரிவு

திரு. ஜெயராமன்

ஆரம்பம்: 15-08-88

A/L 90 — 3.00 p.m.

A/L 89 — 4.00 p.m.

(5737)

# North Lanka Medical College TENDER

Tenders are invited from furniture manufacturers for the supply of One hundred (100) students' Tables and Chairs as those used in Universities for Examinations. Tenders should be delivered or sent under registered cover to: Hony Secretary, N. L. M. C., 164, Fourth Cross Street, Jaffna on or before 12 00 noon on Thursday 25th August, 1988.

Yours in Service,
**Hony. Secretary**
Board of Governors.

(C-6172)

# பதவி வெற்றிடம்

புங்குடுதீவு - நயினாதீவு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

இலிகிதர் - தரம் 111.

**கல்வித் தகைமைகள்:**

1. தமிழ்மொழி, கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம அல்லது எண் கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய க. பொ. த (சா. த) பரீட்சையில ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் 2 வருடங்கட்கு குறையாது இலிகிதராக வேலை செய்திருத்தல் வேண்டும்.
3. வயதெல்லை: 18—30
4. சம்பளத் திட்டம்: 225 - 395 / 10X:-12.50X8 இதர படிகளும.
5. சங்கத்தொழில் பரப்பில வசிப்பவர்களுக்கும், ஆண்பாலாருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி - 31.08 1988.

விண்ணப்பங்கள் 'பொது முகாமையாளர்', புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்.

(C/6201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ நாவாந்துறை புனித பரலோக மாதா தேவாலய வருடாந்த திருநாள் உற்சவச் சிறப்பிதழ் ★

நாவாய்துறைக் கரை அமர்ந்து
நற்கோவில் கொண்டருளும்
நம் தெய்வம் பரலோக மாதா
பவனி சிறக்க வேண்டுகிறோம்!

விக்ரர் அன் சன்ஸ்
(விக்ரேஸ்)
100, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

THE LEADING MUSIC
T.V., VIDEO CENTRE
ELECTRICAL ENGINEERS
VICTOR & SONS
100, Stanley Road,
JAFFNA.

கிளை:
விக்ரேஸ் மியூசிக் சென்ரர்
இல: 887, ஆஸ்பத்திரி வீதி,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.

நாவாந்துறை நகரத்தின் நாயகியே!
பாவாய் பவனி எழுந்து வாருமம்மா!
உங்கள் மளிகைத் தேவை
எதுவோ
எம்மை நாடுங்கள்

மணியம் ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்:
ஆறுமுகம் சுப்பிரமணியம்
2, சென். மேரிஸ் லேன்,
நாவாந்துறை.

பரலோக மாதாவின் பவனி
பாரெல்லாம் உய்விப்பதாக!
மீன்பிடி உபகரணங்களைப்
பெற்றுக்கொள்ள.
சிம்சன்
பீச் ரோட், நாவாந்துறை.
தலைமையகம்: P.J.L. அன் கம்பனி கொழும்பு.
உரிமையாளர்: சென்யூட்

சிறப்பிதழ் ஏற்பாடு:
நாவாந்துறை,
சென். மேரிஸ் சனசமூக நிலையம்,
பங்கு மக்கள்
தயாரிப்பு:
'உதயன்' செய்தியாளர்:
ரி. பி. லிங்கம்.

# ஆலயத்தின் நாற்பத்து நான்கு ஆண்டுகளும் பங்கு மக்களும்!

அலைகடல் தவழும் கரையோரம், பலவளமும் செழித்து, கலை, கல்வி, ஞானம் தனைத் திட்ட நாவாந்துறையில் 'திமிலம்' செலுத்தி, கடல் திரவியம் தேடும் வணிக குலத்தோர் — வன்னிமை சிந்துநாடார் எனச் சிறப்புற்றோர்க்கு கருணையை வழங்கி அருள் பாலித்து வரும் அன்னை தேவதாய்க்கு நாவாந்துறை வடபுறத்தே அழகு தவழும் தேவாலயம் அமைந்துள்ளது.

இற்றைக்கு ஐம்பத்து இரண்டு ஆண்டுகட்கு முன் பல்குலத்தோரும் பகிர்ந்து பாங்குடன் திருவிழாவைக் கொண்டாட உரிமைபெற்ற சென்நீக்கிலஸ் தேவாலயம் கிராமத்தின் தென்புறத்தே உள்ளது.

ஒவ்வோர் குலத்தோரும் ஒருநாள் திருவிழாவை மகிழ்வுடன் பொறுப்பேற்று அலங்கரித்துக் கொண்டாடிய காலத்தே, கருத்து மோதல்களும், பிரிவினைகளும் ஏனோ இவர்கள் உள்ளே வளர்ந்து வேர் கொண்டது.

பெரும்பான்மை கொண்ட இரு சமூகங்கள் மோதிக்கொள்வது சமயநெறிக்கு, ஆன்மீக வளர்ச்சிக்கு இடையூறு எனநினைத்த பங்குக் குரவர்கள் அனைவரையும் ஐக்கியப்படுத்தி சமாதான வாழ்க்கைக்கு நெறிப்படுத்த முனைந்தனர்.

அவர்கள் முயற்சி கைகூடாமல் தோற்றுப் போயிற்று.

இவ்வேளையில் வடபுரத்து இளைஞர்கள் சிலர் சுதந்திரமும் சுயாதிபத்தியமும் உள்ள ஆலயம் ஒன்றைத் தேவ அன்னையின் பெயரில் நிறுவவேண்டுமென ஆவலுற்றனர்.

அவ்வமயம் சென்நீக்கிலஸ் தேவாலயத்தில் பங்குக் குரவராக இருந்த அருட்திரு நல்லையா சூசைநாதர் இவ்வேண்டுலுக்குஆதரவுதெரிவித்து ஆசியும் வழங்கினார். பிரிதலும்கூட சிலசமயம் சமாதானம் ஐக்கியத்திற்கு வலுத்தரும் என நினைத்தார்போலும். முதியோர், மிதவாதப் போக்கினர்இதை எதிர்த்தனர். சென். நீக்கிலஸ் ஆலயத்தில் இருந்த உரிமையினை விட்டுக்கொடுக்க மனமின்றி, பகைமை காரணமாக மூர்க்கத்துடன் எதிர்க்க முனைந்த போதும் வாலிபர்கள் சளைக்காது முயற்சியினில் முன்னேறினர்.

### சன்மார்க்க சங்கம்

1936ஆம் ஆண்டு சென் மேரிஸ் வாலிப சன்மார்க்க அபிவிருத்திச் சங்கமென்ற அமைப்பினை உருவாக்கி சமூகப் பணிகள் பல செய்துவந்த இளைஞர்கள் விளையாட்டுத்துறைகளிலும் ஆர்வங் காட்டினர்.

இவ்வமைப்பின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவின்போது தேவதாய் விண்ணகத்திற்கு ஏகிய 1941-ஆம் ஆண்டு ஆவணி 15-ஆம்நாள் பரலோகதாயின் சொரூபத்தைப் பிரதிமை செய்து, ஒரு ஓலைக்குடிசையிலே ஆலயத்தை உருவாக்கினர்.

பங்குக் குரவராக அவ்வேளை பணி புரிந்த அருட் திரு. வி. ஆர். தாசிசியஸ் அடிகள்ஆரம்பத்தில் இந்நிலையை ஏற்றுக்கொள்ளா விடினும், பின் ஆய்ந்து தெளிந்து யாழ் ஆயரின் அனுமதியையும் பெற்று பிரமாண்டமான ஆலயம் ஒன்றை அவ்விடத்தே உருவாக்குவதற்கு அங்கீகாரத்தையும் பெற்றுத் தந்தார்.

### தற்போதய ஆலயத்திற்காக அத்திவாரம்

தற்போது சம்பிரமாகக் கடலைநோக்கி இடக் கரத்தை விண்ணை நோக்கி உயர்த்தி, வலக் கரத்தால் மனுக்குலத்தை அணைத்து எனது மக்களே உங்களுக்கென ஏற்படுத்தப்பட்ட மோட்சவீடு அங்கே உள்ளது வாருங்கள்'' என அழைப்பு விடுப்பது போல் முகப்புத்தோற்றம் அமைந்துள்ள இவ்வாலயத்திற்கான அத்திவாரம் 1944ஆம் ஆண்டு யாழ் ஆயர் அதிவந்தனைக்குரிய எஸ்.ஏ.கியோமார் அடிகளால், பங்குத் தந்தை வி. ஆர். தாசிசியஸ்முன்னிலையில் இடப்பட்டது.

அந்நாளைப் பொன்னாளாகப் பூரித்துப் புத்தாடை தரித்து தெருவெல்லாம் தோரணங்கள்கட்டி கிராமத்தை அழகுபடுத்திக் கொண்டாடினர் மக்கள்.

### சார்வே அடிகள்

அடுத்துவந்த பங்குத் தந்தையும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவருமான அருட் திரு. ஏ. சார்வே அடிகள் ஆலயத்தின் அத்திவார வேலைகளை அபிவிருத்தி செய்து கட்டுமான வேலைகளைத் துரிதப்படுத்தினார்கள்.

வடபுறத்து மக்கள் சிரமதான அடிப்படையில் கட்டு வேலைகளில் ஆள் மாற்று முறையில் விரைந்து பாடுபட்டு உழைத்தனர். அவர்களது உடல் உழைப்பை வியர்வையாகச் சிந்தி ஆலயத்தை உருவாக்க ஆர்வத்துடன் முனைந்தனர். மேற்றிராசனம் உட்பட எந்தவித வெளியாளர்களின் உதவியும் இன்றி அன்றுடம் சீவியத்திற்கே அல்லாடும் காலைக் கருக்கலில் கண்விழித்துக் கடல்சென்று மாலைவரை மாய்ந்து ஓய்ந்து வயிறு காய வீடுவந்து சேரும் மக்கள் தமது உழைப்பின் ஒபகுதியைத் தமது உதிரத்துடன் கலந்து இந்த ஆலயத்திற்கு உவந்து அளித்து உருவாக்கினார்கள் என்பது யாபேரும் அறிந்த பேருண்மையாகும்.

ஆரம்பத்தில் ஆலயத்தின் உருவம் ஐரோப்பிய ஆலயங்களின் அமைப்பிலேயே இருந்தது. மிகவும் ஆடம்பரமானது. பொருள் செலவும், பணமும் அதிகம் தேவைப்பட்டது. விரைந்து ஆலயத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிய தேவையும் இருந்தது.


வண. சார்வே அடிகளுக்குப்பின் பங்குப் பொறுப்பேற்ற பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வணவை. கரேவ் அடிகள் ஆலயத்தின் அடிப்படைத் தோற்றத்தில் அழகும்,

### 'நாவாய் நம்பி'

எளிமையும் துலங்கும் படியான மாற்றத்தை ஏற்படுத்தினார். கீழைத்தேச கட்டிட மரபு அமைப்பு மாதா கோவில்களின் மாதிரிகளை பின்பற்றி கோவில் வில் அமைப்புக்கள், கூரை வேலைகள் யாவற்றையும் பூர்த்தி செய்து ஆலயத்தின் வேலைகளை ஓரளவு நிறைவு செய்தார். இவரது காலத்திலேயே ஆலயம் மிகவும் விரைந்து கட்டப்பட்டது என்பது மக்களின் கருத்தாகும். வண. கரேவ் அடிகள் ஆலய வேலைகளுடன் இளைஞர்கள், யுவதிகளின் தொழில் முயற்சிகளிலும் முன்நின்று உழைத்தவர். ஆலய சுற்றுடலில் பூந்தடிகளையும், நிழல் மரங்களையும் நாட்டுவித்து ஆலயச் சூழலை அழகுபடுத்தி அமைதிப்படுத்தினார். சில மாதங்களுக்கு முன் வெளிநாடு ஒன்றில் அவர் இறைவனடம் சேர்ந்தமை கேட்டு மக்கள் துயரமடைந்தனர்.

வண. கரேவ் அடிகளுக்கு அடுத்து பங்குப் பொறுப்பேற்றவர் வண. மேரி யோசேப் அடிகள்

(6ம் பக்கம் பார்க்க)



புனித பரலோக மாதா தேவாலயத்தின் முகப்புத் தோற்றம்

## எம்மைக் காத்த அன்னை!

அண்மையில் நடந்த அந்த
அனர்த்தங்கள் அழிவில் நின்று
அன்பர்கள் எம்மைக் காத்த
அன்னையின் அருளே யன்றோ?
துன்பியல் நாடகத்து
துயர்களைந்தருள் சொரிந்து
தன்னகம் அணைத்து வைத்துக்
காத்தவள் அவளே யன்றோ?

- யோ. பிரான்சிஸ்

## தேடிவரம் ஈந்திடுவாள்!

ஆவணியில் ஆலயத்தோர் விழாவெடுத்து
அழகு மிகுதேவ அன்னை பவனிவர
அலைமோதும் நெஞ்சத்தின் துயர்தாங்கி
அமைதி வாழ்வு தந்திடுவாள் தாயெமக்கே

பன்னிருவின் மீன்கள் புடை சூழவே
பாதமதில் சந்திரனும் தான் கூடவே
மைந்தானும் யேசுவைக் கண்டாளவே
மகிமையோ டெழுந்தாள் விண்ணகத்தே!

நாவாந்துறை.
ம. சிந்தாத்துரை.

குவலயம் காக்க வந்த
கோமகன் அன்னை மேரி
ஆசியை வேண்டும்!
ஞானம்ஸ் ஸ்ருடியோ
அன்
ஹோட்டல் ஞானம்ஸ்
299, 301 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

கவினுறு அழகின் தோற்றம்
கருத்தை விட்டகலாதம்மா!
உங்களுக்குத் தேவையான
பீங்கான், கோப்பை, கதிரைகள்
வாடகைக்கு விடப்படும்.
பத்மன்ஸ்
உரிமையாளர்: அ. அமிர்தநாதர்
22, சென். செபஸ்தியன் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

உங்கள் பளிகைத் தேவையைப்
பூர்த்தி செய்ய வாருங்கள்!
ராஜா ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்: மு. சண்முகராஜா
23, நாவலர் வீதி,
நாவாந்துறை.

பரலோகத்தே எழுந்து சென்ற
பாலகன் யேசுவின் தாயே!
நிரந்தரம் நல்வாழ்வு சேர
நின்னருளை யாசிக்கின்றோம்!
மு. பரமானந்தம்
பலசரக்கு மாளிகை
3, கடற்கரை வீதி,
நாவாந்துறை.

நாவாந்துறை நகர் வீற்றிருந்து
நமையாளும் பரலோகத் தாயே!
நாமார்க்கும் குடியல்லோ மென்னும்
நல்வாழ்வைத் தந்திடுவாய்!
முத்துநாதன் ஸ்ரோர்ஸ்
(பலசரக்கு வியாபாரம்)
உரிமையாளர்: M. நாதன்
கடற்கரை வீதி,
நாவாந்துறை.

நாவாந்துறை, சென். மேரிஸ்
தேவாலய திருநாள் சிறப்படைவதாக!
அஸ்மீன் கபே
உரிமை: K. ம.·.றூப்,
390, கடற்கரை வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

அன்னைமரி ஆண்டினில்
அலங்காரத் தேருர்ந்து
மன்னுபுகழ் மரி அன்னையே
மானலத்து வாருமம்மா!
ஆர். பி. இராசு
(கடல் உணவு கொள்வனவாளர்)
வள்ளுவர்புரம், தையிட்டி,
காங்கேசன்துறை.

நாவாந்துறை பரலோக மாதா ஆலய
வருடாந்த உற்சவ திருநாளுக்கு
வாழ்த்துக் கூறுகிறோம்!
க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
5 (76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பரலோக மாதாவே நாவாய்துறையூரில் பவனி வாரும் மரகதப்பட்டுத் தேருர்ந்து!
எஸ். அன்ரன், கடல் உணவு பதனிடும் நிலையம்
கடற்கரை வீதி, நாவாந்துறை வடக்கு, யாழ்ப்பாணம்.
கிளை: கடற்கரை வீதி, குருநகர்.
S. ANTHON, SEA FOOD PURCHASING CENTRE
Beach Road, Navanthurai North, JAFFNA.
Branch: BEACH ROAD, KURUNAGAR.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மருத மடுமாதா விண்ணேற்பு விழா சிறப்பிதழ் 1988 ஆகஸ்ட் 15 ★

With the best Compliments
from
**JAZEEMAS**

உங்களுக்குத் தேவையான
சகலவிதமான
✶ 'பிளைவூட்'
✶ 'போர்மிக்கா சீற்'
✶ 'காட்போட்'
ஹாட்வெயார்ஸ் பொருட்களைப்
பெற்றுக்கொள்ள

JAZEEMAS
95 3, Stanley Road, JAFFNA.

JAZEEMA
PICTURE PALACE
222, K.K.S. ROAD, JAFFNA.

மகளிருக்கான 6 மாத கால
**டிப்ளோமா மனையியல்
வகுப்புக்கள்**
(Diploma in Home Economics Classes)

- ★ Cake – Icing
- ★ Dress-Making
- ★ Flower-Making
- ★ Kolam
- ★ Class & Fabric Painting
- ★ Cookery
- ★ Handi-Craft
- ★ Hair-Styling

தொழில் புரியும் பெண்களின்
வசதிக்காக ஞாயிறு வகுப்புக்களும்
நடைபெறும்.
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்: 19-08-88
**கலாலயா**
விக்ரோறியா றேட்,
யாழ்ப்பாணம்.
[ Near Hotel Subhas ]

With the best Compliments
from
North Ceylon Technical
Institute
Leading in:
ACCOUNTANCY CLASSES,
TECHNICAL CLASSES,
AND NURSING & PHARMACY,
14, St. Peters Lane,
Hospital Road, JAFFNA.

With the best Compliments
from
**New Master
Institute**
B.M.C. Lane, JAFFNA.

- ★ RADIO, T. V. VIDEO DECK, SPARE PARTS
- ★ TRANSFORMER COIL WINDING
- ★ VIDEO FILMING, PHOTOSTAT COPYING
AND
- ★ REPARING ALL KIND OF ELECTRICAL GOODS

**Mini Trades Centre**
J. M. C. Building, 7, Stanley Road,
JAFFNA.

அன்பளிப்பு
கலை, வர்த்தக, விஞ்ஞான
வகுப்புக்களுக்கு
அறிவொளி கல்விக் கழகம்
150, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

# மடுப்பதியில் வாழும் நாட்கள்

## பேரின்பம் பொலியும் நற்றினங்கள்

செல்வி
எஸ். ஸ்ரீரஞ்சினி

அதிகாலை கிழக்கு வெளிக்கும் நேரம்தொடக்கம் இரவு நான்கு சாமம் வரைக்கும் யாத்திரிகர்கள் மடுப்பதிக்கு வந்து சேர்ந்து கொண்டேயிருப்பார்கள். மோட்டார் வாகனங்களிலும், புகையிரதத்திலும், மாட்டுவண்டிகளிலும், சைக்கிளிலும் கால்நடையாயும் யாத்திரிகர்கள் வந்து சேருவார்கள். அதோ தெரிகிறவர்கள் ஒரு குடும்பத்திற்குச் சேர்ந்தவர்கள். அங்கு ஒரு தாய் தன் கைக்குழந்தையுடன் வந்திருக்கிறார்கள். கந்தை உடுத்திக் கையில் பொல்லூண்டி நிற்பவன் அவர்கள் ஊருக்குச் சேர்ந்தவன். முந்தியவர்களின் உதவியுடன் இங்கு வந்து சேர்ந்திருக்கிறான். அதோ வருகிற மோட்டார் லொறியில் வருகிறவர்கள் தேவதாயார் பேரில் பண் பாடிக் கொண்டும், செபித்துக் கொண்டும், வருகிறார்கள். அவர்கள் வந்த வழி முழுவதும் "ஆவே ஆவே மரியா" 'வாழ்க மரியே' என்று பாடிக் கொண்டும் செபமாலை செபித்துக் கொண்டும் வந்தவர்கள். இவர்கள் செல்வம் உடையவர்களல்லர். ஆயினும் மடுமாதாவைக் காணவேண்டுமென்ற ஆசையுடன் தங்கள் நாளாந்த செலவிற் சொற்பத்தைச் சேமித்து வைத்திருந்தவர்கள். வருபவர்களிற் சிலர் தாங்கள் ஏற்கனவே கேட்டுப் பெற்ற வீடுகளிற் தங்குவார்கள். வேறு சிலர் கிடுகால் வேய்ந்த குடிசைகளில்



தங்குவார்கள்; அதிகப் பற்றுளோர் நிழல் மரங்களின் கீழ் மரக்கொப்புக்களால் விடுதிகளை அமைப்பார்கள். மடுப்பதியைச் சுற்றிவரக் காலியான ஒரு குழிநிலம் கூடக் காண்பதரிது.

காலை ஐந்து மணியானதும் திரிகாலை மணியடிக்கும். விடுதிகள் தோறும் கேட்கும்படி ஒலி பெருக்கி மூலம் காலைச் செபம் சொல்லப்படும். யாத்திரிகர்கள் தங்கள் படுக்கையை விட்டுப் பரபரப்புடன் எழுந்து அவ்விடத்திலேயே முழந்தாளிட்டுக் காலைச் செபம் ஓதுவர்.

ஐந்தரை மணிக்கெல்லாம் திருப்பலிப் பூசை தொடங்கித் தொடர்பாக ஏழரை மணிவரையும் நடந்தேறும். கோவிலிலும் சிற்றாலயங்களிலும் ஐம்பது குருமார் திருப்பலியை ஒப்புக் கொடுப்பார்கள். இந்நேரம் யாத்திரிகர்கள் கோவிலிலும் சிற்றாலயங்களிலும் நிறைந்து நின்று திவ்விய பூசை கண்டு திருவிருந்தருந்துவார்கள். ஒரு தொகையான குருமார் தேவ நற்கருணையைப் பகிர்ந்து கொடுத்துக் கொண்டிருப்பார்கள். காலை ஒன்பதரை மணிக்குத் தமிழ் யாத்திரிகர்கள் கோவிலில் காரணிக்க விளக்கத்துடன் செபமாலை செபிப்பர். இப்படியே சிங்களம் பேசும் யாத்திரிகர்கள் பின்னேரம் மூன்றரை மணிக்குச் செபமாலையைத் தியானிப்பார்கள்.

மாலை ஆறரை மணிக்கு நவநாள் ஆராதனைக்கு யாத்திரிகர்களைக் கோவில் மணிகள் அழைக்கும். மண்டபத்திலிருந்து முற்றவெளியைப் பார்த்தால் ஆனந்தமான காட்சியொன்றைக் காணலாம். முற்றவெளி முழுவதும் செபம் செய்யும் யாத்திரிகர்களால் நிறைந்து இருக்கும். ஒலி பெருக்கி மூலம் ஒரு குருவானவர் முதலோத ஒரே வாயாய் முப்பதினாயிரம் பேர் மறுமொழி சொல்லுவார்கள். கல்லும் கரையும் பிரசங்கங்கள் சிங்களத்திலும் தமிழிலும் நடக்கும் மாதாவின் பேரால் உத்தம கிறிஸ்தவ சீவியத்தை அனுசரிக்கும்படியும், தேவதிரவிய அனுமானங்களைக் கைக்கொள்ளும்படியும் அழைக்கப்படுவார்கள். மண்டபத்தில் சற்பிரசாத ஆசிர்வாதம் அருளப்படும். குருவானவர் விசுவாசிகளை ஆசி நீரால் மந்திரிக்கும் பொழுது அனைவரும் "வாழ்க வாழ்க" என்று மாதாவை வாழ்த்தும் கீதம் யாவர் மனதையும் ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்தச் செய்யும். கோவிலிலிருந்துஊர்த்து செபிவரை மெழுகுவர்த்திச் சுற்றுப் பிரகாரத்துடன் இவ்வாராதனை முடிவு பெறும். மாலைச்செபம் அன்றைய ஆராதனைகளுக்கு முடிவு கூறும். சில வேளைகளில் மாலை 9. 30 மணி தொடக்கம் இரா ஆராதனையும் நடைபெறும்.

திருநாட்களின் போது திருச்சபையின் ஆடம்பர வைபவச் சிறப்புக்களைக் காணலாம். மேற்றிராணியார் மாலை ஆராதனைக்கும் அடுத்த நாட்காலை பாடற் பூசைக்கும் தலைமை வகிப்பார். பூசை முடிவுற்றதும் மாதாவின் அலங்காரச் சுற்றுப் பிரகாரம் மடுப்பகுதியை வலம் வரும் இவ்வாராதனைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து இது பூலோக மோட்சமென்று மயங்காதாரில்லை.

இந்த மங்களகரமான பவனி யாவர் மனத்தையும் கவர்ந்து பசுமரத்தாணி போல் பதிந்து கொள்ளும். இவ்வித ஆடம்பரங்களை வேறெவ்விடத்திலேனும் காண்டலரிது.

பதியை விட்டு விடைபெறும் வேளை வரும் நாலைந்து நாட்களாக மாதாவின் பதியிலிருந்து அமைதியும் ஆனந்தமும்

([illegible] பக்கம் பார்க்க)

With the best Compliments
from



**Video Vision**
for quality
VIDEO FILMING
213, Power House Road,
JAFFNA.
✶
**Video Vision**
245, Stanley Road.
JAFFNA.

கொழும்பு மூவிலண்ட்
ஸ்தாபனத்தாரின் ஆதரவுடன் உங்கள்
அபிமான நடிகர்களின் புதிய படங்களை
யாழ் நகருக்கு முதன் முதலில் கருவித்து
வீடியோ ரசிகர்களை மகிழ்விக்கும்
ஒரே ஸ்தாபனம்
**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
உங்கள் வீடியோ படப் பிரதிகள் எதுவானாலும் சிறந்த முறையில் பதிவு செய்து கொள்ள (Re-Recording) எம்முடன் உடன் தொடர்புகொள்ளுங்கள்.

அன்பளிப்பு
உங்கள் சகல விதமான
தளபாடத் தேவையையும்
ஒரே இடத்தில் தீர்த்துக் கொள்ள
**STANLEY
Furnishing Palace**
5, 7, Stanley Road,
Jaffna.

**சேவை**
தேசிய அடையாள அட்டைகள் உத்தியோக அடையாள அட்டைகள், உறுதிகள் மற்றும் பெறுமதிமிக்க பத்திரங்கள் மோட்டோர் – ரைக்ஸ் (Tax) பாஸ் (Pass)களைப் பேணும் வெளிப்புற பிளாஸ்ரிக் சவர்களை (Lamination)க் குறித்த நேரத்தில் குறைந்த செலவில் செய்துகொள்ள நீங்கள் நாடும் இடம்:
**கிளீன் கட்**
239, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

மருதமடுப்பதி வாழ் மாமரித்தாயின்
மாட்சிமையை இறைஞ்சும்
**ARRKAY AND SONS**
உங்களுக்குத் தேவையான
ஈஸ்ரேண், லுமாலா சைக்கிள்களையும்
உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
✶ லுமாலா சயிக்கிள் ✶
நான்கு வருட உத்தரவாதம்
[illegible], Stanley Road,
Jaffna,

J. M. J.
**எஸ். பி. அன்ரன்**
மகிழ்ச்சியுடன் வழங்கும்
**வெளிநாட்டுப் பயண
ஒழுங்குகள்**
✶ கனடா ✶ ஜெர்மனி ✶
✶ அமெரிக்கா ✶ பிரான்ஸ் ✶
மேற்படி
நாடுகளுக்கான எமது குழுக்கள் வாரந்தோறும் வெற்றிகரமாகப் பயணம்மேற்கொண்டு வருகின்றன. மேலே குறிப்பிட்ட நாடுகளுக்குச் செல்வதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம். எனவே விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.
மேலும்
கிறீஸ் ✶ சிங்கப்பூர் ✶ கனடா
வீட்டுப் பணிப் பெண்கள்
சவூதி – விமான நிலைய ஆஸ்பத்திரி
சுத்திகரிப்பாளர்கள்
மாலைதீவுத் துறைமுக வேலையாட்கள்
முதலிய பதவிகள் பெற்றுத் தரப்படும்.
மற்றும் சகல விவரங்களுக்கும்
உங்கள் பயண அமைப்பாளர்
**S. P. ANTON**
வேல் றேடர்ஸ்
(மக்கள் வங்கி முன்பாக)
141, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

MAYURA
JEWELLERY
நங்கையர் விரும்பும் நவநாகரிக
நகைகள் 22 கரட் தங்கத்தில்
சிறந்த முறையில் செய்துகொள்ள
இன்றே நாடுங்கள்
**மயூரா ஜுவல்லறி**
220 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

Computer Programming
in Basic Language
Course Period: 40 Days
Commence on: 20 - 08 - 88
FEE : 750/-
Qualification: G. C. E. [O/L]
UNICO
COMPUTER CENTRE
NO. 5, POWER HOUSE ROAD,
2 nd LANE,
JAFFNA.

அன்பளிப்பு
உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான
விஞ்ஞான வகுப்புக்கள் திறமையும்
அனுபவமும் மிக்க மாணவர்களால்
பயிற்றுவிக்கப்படுகின்றது
**நாகரட்ணம் இன்ஸ்ரிரியூட்**
3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு
உங்கள் சுவை கவர்ந்த ஐஸ்கிறீம்.
சிற்றுண்டி வகைகளுக்கு
ரவர் கோப்பி அன் கூல்பார்
324, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு
**அஸ்ரன் பதிப்பகம்**
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ மருத மடுமாதா விண்ணேற்பு விழா சிறப்பிதழ் 1988 ஆகஸ்ட் 15 ★



OUR LADY OF MADHU
PRAY FOR US

''உன் கண்களை விளித்து சுற்றுப் புறமும் பார். இவர்கள் ஒன்ருய் குழுமி உன்னிடம் வந்திருக்கிறார்கள். உன் குமாரர் தூரத்திலிருந்து வருவார். உன் குமாரத்திகள் உம் மருகில் எழுவர்'' இவ்வசனங்கள் இசையால் தீர்க்கதரிசியினுல் பொதுவான திருச்சபையின் உயர் நோக்கத்தை வர்ணிப்பவை.

(இசை, 60 : 4)

வருடந்தோறும் இலங்கையின் அட்டதிக்குகளிலும் இருந்து எங்கள் மடுத்தாயாரின் பாதத்தண்டை வந்து கூடும் பக்தகோடிகளைக் காணும்பொழுது மேற்கூறிய வசனங்கள் நம் ஞாபகத்தில் வருகின்றன. தாயாரின் மக்கள் ஆயிரம் பதினுயிரக்கணக்காய் இப்புனித ஸ்தலத்திற்கு வருகின்றனர். ஏனெனில் இத்தீவில் தேவமாதாவின் பக்தி செழித்தோங்குவதற்கு இப்புண்ணிய க்ஷேத்திரம் மையமாய் விளங்குவது மாத்திரமல்ல, வேதகலாபனை வேளையில் எம் விசுவாசத்தின் புகலிடமாகவுமிருக்கிறது.

# மடுத்திருப்பதியின் மேன்மை வரலாறும்

# ஆயர்களின் நற்சேவை வழிநடத்தலும்

1583ல் மன்னாரிலும் அதைச்சார்ந்த இடங்களிலுமாக 26 ஆலயங்கள் உள்ளன. மொத்தம் 43000 கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். மன்னார்த் தீவிலிருந்து பூநகரிக்குச்செல்லும் பாதையில் 6ஆவது மைலில் உள்ளது மாந்தை. இந்த இடம் புராணவரலாற்றுச் சிறப்புமிக்க இடம் மட்டுமல்ல, இன்று லட்சோபலட்சம் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் மடு அன்னையின் ஆதி இருப்பிடமுமாகும். இன்று மடுவில் எழுந்தருளியிருக்கும் செபமாலை அன்னையின் திருச்சொரூபம் இங்கு இருந்த கோவிலிற்றான் இருந்தது.

**ஒல்லாந்தர் ஆட்சியில் கத்தோலிக்கர்**

வரலாறு ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தைச் சந்திக்கிறது. அது கத்தோலிக்கரை அழித்தொழிக்கும் கைங்கரியத்தையும் செய்ய முற்பட்டது. ஆலயங்கள், சுரூபங்கள் நொருக்கப்பட்டன. அஞ்சிப் பயந்தனர் அன்றைய கத்தோலிக்கர். சிலர் 1670ம் ஆண்டு இந்த வேதகலாபனையின் வேக்காட்டில் இருந்து தம்மையும் செபமாலைஅன்னையின் சொரூபத்தையும் தூக்கிக்கொண்டு இரவோடிரவாக அடர்ந்த வன்னிக் காடுகளூடாகப் புறப்பட்டு கண்டி இராச்சிய எல்லைக்குள் பிரவேசித்தனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து கண்டிக்குச் செல்லும் இராச வழியில் கண்டி அரசனின் சுங்கவாடியொன்றைக் கொண்ட புராதன குளம் ஒன்றினை அண்மித்து ஒரு கிராமத்தை அடைந்தனர். அவ்விடம்தான் மாந்தை செபமாலை அன்னையின் நிரந்தர புகலிடம் அமைந்துள்ள 'மருதமடு' எனும் கிராமம்.

**சிலெ மருதமடு**

அதே காலகட்டத்தில் இவர்களைப் போன்று ஒல்லாந்தரின் கொடுமைகளுக்கஞ்சி யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு வெளியேறி வன்னிக்காடுகளுக்குள் அலைந்து திரிந்த இன்னுமொரு கூட்டமும்அங்கே வந்து சேர்ந்தது. அவர்களுள் சுமார் 700 பேர் இருந்தனர். அப்படி வந்த 700 பேரில் ஒருவர் போர்த்துக்கேயத் தளபதி ஒருவரின் மகளான எலேன என்பவராம். அப்பெண்மணியின் பெருமுயற்சியாலேயே அங்கு அன்னைக்கு ஆரம்பத்தில் ஆலயம் எழுப்பப்பட்டது. அவளது நினைவாக சிலேன மருதமடு என்ற காரணப்பெயரும் மடுத்திருப்பதிக்கு வழங்கப்பட்டு வந்தது.

பிற்காலத்தில்கோவையில் இருந்து இலங்கைக்கு வந்த வண. யோவாஸ் முனிவரும் அவருக்குப்பின் வருகைதந்த தியானசபைக் குருக்களாலும் இவ்விடத்து மறைவிசுவாசம் உறுதிப்படுத்தப்பட்டு வளர்ச்சியுற்றது. 1706ம் ஆண்டில் இருந்து மாதோட்டப்பகுதி அனைத்துக்கும் சிலேன மருதமடுவே தலைமைப் பங்காகத் திகழ்ந்து வந்தது. 1695ம் ஆண்டில் இருந்து தவமுனிவராம் பெற்ருஸ் அடிகளே இப்பங்குகளுக்குப் பொறுப்பாளியாக இருந்தார் என்று வரலாறு கூறுகின்றது.

**மடுக் கோவில்**

கோவைக் குருமார் காலத்தில் இக்கோவில் சுற்றுவட்டார ஊர்களில் இருந்த மக்களுக்கு இது ஒரு யாத்திரைத் தலமாக விளங்கத் தொடங்கியது. அந்நாளில் சங்கிடுத்தார் பதவி வகித்த பறங்கியரான ஸ்ரீ மோயிஸ் என்பவர் 1823ம் ஆண்டில் குதிரை லாடன் தோற்றத்தில் மூன்று பக்கச் சுவர்கொண்ட சிறு குடிசைக் கோவிலைக் களிமண்ணால் கட்டுவித்தார். எட்டு அடி உயரமான சுவர்க்கோவிலின் நடுவே பீட மேசையும் வைக்கப்பட்டது. கோவிலின் பின்புறம் குருமாரின் உபயோகத்திற்கென அறையாகஅமைக்கப்பட்டது. 1868ல் ஆயர் பொன்ஜீன் அவர்கள் நியமனம் பெற்றார். ஆடித்திங்கள் 2ம்நாளைக் கொண்டாடும் வழக்கத்தை பொன்ஜீன்ஆண்டகை அவர்களே1870ல் கொண்டு வந்தார். ''அந்நாட்களில் இருந்து மடுச்சேத்திரம் பல்லாயிரக்கணக்கான பக்தர்களைக் கவர்ந்துகொண்டே வருகிறது'' என்று நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் நவிலுகின்றார்.

1872ல் முதன்முதலில மடுத்திருப்பதியைத் தரிசித்த பொன்ஜீன் ஆண்டகை அவர்கள் தற்போது இருக்கும் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டினார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட ஆலயத் திருப்பணி மெலிசன் ஆண்டகை காலத்தில் தொடர்ந்து யூலன் ஆண்டகை காலத்தில் நிறைவுபெற்றது. மற்றும் குருமனை, நற்கருணைச் சிற்றாலயம், பக்தர்களின் வசதிக்காக தண்ணீர்த் தடாகப் புனரமைப்பு குடிநீர்க் கிணறுகள் என இப்பகுதி முன்னேறி வந்துள்ளது.

**யாத்திரைத் தலமாக அங்கிகாரம்**

யூலன் ஆண்டகையைத் தொடர்ந்துவந்த புரே ஆண்டகை அவர்களே இத்தலத்தை யாத்திரைத் தலமாக அங்கீகரித்தார். திருத்தந்தையின் பிரதிநிதியைக் கொண்டு அன்னையின் திருச்சுரூபத்துக்கு முடிசூட்டுவிழா எடுக்க முயற்சியை மேற்கொண்ட காலத்தில் புரே ஆண்டகை அவர்கள் இறைபதமேகினார். அவர் கண்ட அக்கனவானது அவருக்குப்பின் கியோமர் ஆண்டகை பதவியேற்ற தினத்தன்று மடுப்பதியில் இடம்பெற்றது.

கியோமர் ஆண்டகையின் 25 வருட சேவைக் காலத்தில் இத்திருத்தலத்தின் வளர்ச்சி மேன்மையுற்றது. பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் ஆராதனைகளில் பங்குகொள்ளும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கும் முன்முகப்புச் சித்திரக் கூடம் மடுத்திருப்பதியின் வாசலில் நிறுவப்பட்டுள்ள யாத்திரிகர்களின் மாதா சுரூபம் மற்றும் ஆங்காங்கே நிறுவப்பட்டிருக்கும் சுரூபங்கள் யாவும் இவரால் நிறுவப்பட்டவையே. திரும்பும் திசையெல்லாம் தோற்றமளிக்கும் இச்சுரூபங்கள் இது ஒரு பக்தித் தலம் என அனைவருக்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

அவரைத் தொடர்ந்து ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களின் நிர்வாகத்தின் கீழ் இலங்கைவாழ் மக்கள் அனைவரையும் ஈர்த்து எடுக்கும் யாத்திரைத் தலமான இப்பதி மாறுதல் அடைந்தது.

**மன்னார் மறை மாவட்டம்**

பின்னர்1973 ம்ஆண்டு இன்றைய யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் பொறுப்பேற்றார்.

இத்தலம் 1981 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய மன்னார் மறை மாவட்டத்தின் கீழ் வந்தது.

மன்னார் மறை மாவட்டத்தின் முதல் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாரின் நிர்வாகத்தின் கீழ் இப்பதி உலக மக்களிடம் அன்புக்கரம் நீட்டி நிற்கின்றது. ★

# புனித மரியாளின் ஆண்டு எதற்கு?

மீட்புத் திட்டத்தில் மீட்பரின் அன்னைக்கு ஒரு விசேட இடமுண்டு. இந்த ஆழ்ந்த உண்மையை உணர்த்தி நிற்பதுதான் மரியாளின் ஆண்டு. மரியாளின் ஆண்டு 1987, யூன் மாதம் 7ம் திகதி பெந்தகோஸ்து திருவிழாவுடன் ஆரம்பமாகி 1988 ஆவணி மாதம் 15ம் திகதி அன்னையின் விண்ணேற்பு விழாவுடன் முடிவடைகிறது. மரியாளின் ஆண்டின் பிரகடனத்தின் வழியாக கிறிஸ்துவினதும் அவரது திருச்சபையினதும் மறைபொருளில் இறை அன்னையின் விசேட பிரசன்னத்தை வலியுறுத்துகின்றது.

மரியாளின் ஆண்டு பெந்தகோஸ்து திருவிழாவுடன் ஆரம்பமாவதற்குக் காரணம், அன்று ஆரம்பமாகிய திருச்சபை இறைமக்கள் கூட்டமாக நித்தியத்திற்கான தனது பயணத்தை அனைத்து மக்கள் தேசங்கள் மத்தியில் விசுவாசத்தின் மூலம் மேற்கொண்டு வருகின்றது. திருச்சபையின் காலம் தொடங்கிய வேளையில் கிறிஸ்துவின் தாய் பிரசன்னமாய் இருந்தாள். அப்போஸ்தலர்கள், மற்றும் அவளது திருமகளின் சீடர்கள் தூய ஆவியின் வருகைக்காக காத்திருந்த போது அவர்கள் மத்தியில் அன்னையும் செபத்தில் ஈடுபட்டிருநதாள். மனித வரலாற்றில் திருச்சபை மேற்கொள்ளும் பயணத்தின்போது மரியாள் திருச்சபைக்கு முன் தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றாள், ஆண்டவரின் அடிமை என்ற வகையில் தனது திருமகன் கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட்ட மீட்பு அலுவலில் இடைவிடாமல் ஒத்துழைக்கின்றவளும் அவளே. இவ்வாறு இந்த மரியாளின் ஆண்டின் மூலம் திருச்சபையானது ஆண்டவராகிய கிறிஸ்துவின் மீட்பு அலுவலில் இறை அன்னையின் விசேடமான தாய்க்குரிய ஒத்துழைப்புக்குச் சான்று பகரும் யாவற்றையும் மீண்டும் நினைவு கூருவது மட்டுமன்றி, தன்னைப் பொறுத்தமட்டில் எதிர்காலத்தில் இத்தகைய ஒத்துழைப்புக்கு வழிகளைத் தயார்படுத்தவும் அழைக்கப்பட்டுள்ளது.

எனவே, தூய கன்னி விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட திருவிழாவுடன் நிறைவுபெறும் மரியாளின் ஆண்டு, மரியாள் நமக்கு நிச்சயமான நம்பிக்கையின் அடையாளம் என்பதனையும், பயணம் செய்யும் இறைமக்களின் ஆறுதலாக அன்னை உள்ளாள் என்பதையும் ஆழமாக உணர்த்தியும், நினைவுபடுத்தியும் நிற்கின்றது. ★

செபஸ்ரியன்
அ. ம. தி.

எல்லோரும் நலப்பெற கருணைமிகு
மடுமாதாவை வேண்டுகிறோம்!

✶ மங்கையர் விரும்பும் நவீன டிசைன்களில் தரமான தங்க நகைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்

✶ உங்கள் கலர் பிலிம்களை கம்பியூற்றர் முறையில் சிறப்பாகப் பிறின்ற் செய்து கொள்வதற்கும்

ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்[பிறைவேற்]லிமிட்டட்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Wishing
A Happy Madhu Feas

FOR ALL YOUR
TRAVEL
PHOTO COLOUR PRINTING
TRAVELS DOCUMENTS
TELEX AND CABLE

CONTACT;
THE PIONEERS IN THE DOMESTIC FLIGHT TO AND FRO COLOMBO / JAFFNA

MACK TRAVELS
JAFFNA

அன்புடன்
யாழ் நகரின் முன்னேடிக்
கல்வி நிறுவனம்
BOND INSTITUTION
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு
BECON
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Dilka Furniture Palace
Sale! Sale!! Sale!!!

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் எமது ஸ்தாபனம் வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் வழங்கும்

விசேட விலைக் குறைப்பு!

போம்றபர் செற்றிகள், அலுமாரிகள், கட்டில்கள், மகாராஜா செற்றிகள், ஆர் பிக்கோ சேஸ்ரா மெத்தைகள், ஸ்ரீல் அலுமாரிகள்

10 வீதம் விலைக் குறைப்பு
08-08-1988 -- 08-09-1989

இல. 234, 236, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA TECHNICAL INSTITUTE

Sony, National ரெலிவிஷன்சள் ரியூனர், Fly Back, I. Cக்சள் National, J. V. C. Akkai வீடியோ, டெக்குக்குரிய வீடியோ கெட் R F Conveter, Audio Head என்பன வற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். இங்கு பெற முடியாத உதிரிப்பாகங்கள் சிங்கப்பூரில் இருந்து பெற்றுக் கொடுக்கப்படும்.

Jaffna Technical Institute
ஸ்ரான்லி வீதி, (றெயில்வே-டவை அருகாமை)
யாழ்ப்பாணம்.

மடு அன்னையின் பெருவிழாவை
நினைவுகொள்ளும் மக்களுடன்
நாமும் இணைந்து கொள்கின்றோம்.

விக்ரர் அன் சன்ஸ்
(விக்ரேஸ்)
இல. 100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

விக்ரேஸ் மியூசிக் சென்ரர்
இல. 887, ஆஸ்பத்திரி வீதி,
சுண்டிக்குழி யாழ்ப்பாணம்.

விக்ரர் அன் சன்ஸ்
இல. 81, [illegible]
சுன்[illegible]

யாழ் நகர மக்களே!!!
✶ சகல விதமான பால்மா வகைகள்
✶ L.P. காஸ்
✶ நவதானிய வகைகள்

இவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

CITY AGENCY
No 158, Stanley Road,
JAFFNA.
Telephone: 24817

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பியூட்டர் கல்வி

**Computer Programming in Basic Language**

பயிற்சிக் காலம்: 2 மாதம்

ஆரம்பம்: 20-8-88

(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

கட்டணம்: 750/-

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**UNIKCO COMPUTER CENTRE**

No 5, Power House Road,
2nd Lane,
JAFFNA.

[C-6167]


## ஆலயத்தின் ..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்தை வர்ணங்கள் இட்டு அழகுபடுத்தினார். ஆலயத்தின் மேற்புறத்தில் – சுவர் சுற்றி ஜன்னல்களை அமைத்து அழகு நிறங்களில் கண்ணுடிகளைப் பொருத்தி ஆலயத்தின் அமைப்பின் முழுவதையும் பூர்த்தி செய்தார். அத்தோடு 1987இல் பங்குத் தந்தையாக இருந்த அருட்திரு பி. எம். இம்மனுவேல் அடிகள் ஆலயத்தின் முன்மண்டபம் (போட்டிக்கோ) அமைப்பதற்கு துணையாக இருந்தார்.

இன்றுவரை இம்மக்கள் தமது சொந்த உழைப்பின் ஒருபகுதியை ஆலயத்திற்கென்றே அர்ப்பணம் செய்து வருவது மனங்கொள்ளத்தக்கது.

**மரியன்னை ஆண்டு**

தேவ அன்னையின் –மரியாளின் ஆண்டாக கத்தோலிக்க திருச்சபை இவ் ஆண்டினைப் பிரகடனப்படுத்தியுள்ளது. கத்தோலிக்க உலகம் முழுவதும் அன்னையின் ஆண்டினைப் பக்தி சிரத்தையுடன் கொண்டாடி வருகின்றது. ஈழத்திலே உள்ள பல தேவதாயின் ஆலயங்கள் இவ்வாண்டினை அருள்சுரந்து கருணை மழை பொழியும் அன்புத்தாயின் சிறப்புக்களை அகிலமும் உணரும் படியாக சிறப்புடன் கொண்டாடிக் கொண்டிருக்கின்றன. செபதபத்தினால், வேண்டுதல்களால் மகிமைப்படுத்துகின்றனர்.

44ஆம் ஆண்டு நிறைவினை 15- 8- 88இல் நிறைவு செய்யும் இவ் ஆலயம் மரியாளின் ஆண்டினையும் சிறப்புடனும், சீர்மையுடனும் சேர்ந்து கொண்டாடுகின்றது.

## சாவகச்சேரியில் சைக்கிள் திருட்டு

சாவகச்சேரி ஆக 14

சாவகச்சேரியில் சைக்கிள் திருட்டு தொடர்கிறது.

நவீன சந்தையின் முன்பு பூட்டிவிடப்பட்ட மூன்று சைக்கிள்கள் திருடப்பட்டு விட்டன.

இதற்கு முதல் நாள் மீன்சந்தையின் முன்பாக விடப்பட்ட சைக்கிளும் திருடப்பட்டிருந்தது.

## நினைவஞ்சலி



செல்வி உஷாதேவி பாலசுப்பிரமணிய சர்மா

(யாழ்/கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதலாம் ஆண்டு மாணவி)

தோற்றம்: 08 - 01 - 1964 மறைவு: 06 - 08 - 1988

அன்பே உயிராக அழகே உருவாக
அறிவே உயர்வாக ஆருயிரே வாழ்ந்தாய் நீ!
அளவில்லா அன்புருவே அவனியிலே
இனி உந்தன்
அழகுமுகம் காண்பதெப்போ?
சித்திரத்தின் சிகரமே சீரான பெருந்திருவே
உத்தமியே உஷாவே நீ எங்கே
சென்றுவிட்டாய்?
பத்தொன்பதாம் வயதினிலே கல்விப்பணி
தொடங்கிவிட்டாய்
பார்போற்ற ஐந்தாண்டு பணிசெய்தாய்
மலையகத்தில்
சித்திரமே பயிற்சிக்காய் கலாசாலை
வந்தபின்னே
எத்தனையோ கனவுகண்டாய் எல்லோர்க்கும்
உதவிநின்றாய்
புண்பட்ட உள்ளத்தை புன்னகையால்
தேற்றிவிட்டாய்
இன்பத்தை எமக்களித்து எத்தனையோ
கதை சொல்வாய்
அன்பே தெய்வமென்று அனுதினமும்
சொல்லிடுவாய்
எந்நாளும் மாறாத இறையன்பு பெற்றவளே
எம்மோடு நீ வாழ யமனுக்கும்
பொறுக்கவில்லை
ஏனம்மா! இக்கொடுமை எப்படி நாம்
தாங்குவது?
உன்னோடு கதைப்பதற்கு உஷா... உஷா...
என்றோம்
ஓடிவரும் உனை இப்போ காணுமல்
வாடுகின்றோம்
அவனியிலே அவலங்களைக் காண்பதற்கு
முடியாமல்
அமைதியைத் தேடி நீயும் ஆண்டவனை
நாடினையோ
உனக்கமைதி தேடிவிட்டாய் எமக்கினிமேல்
அமைதியில்லை
உன் ஆத்ம சாந்திக்காய் உளம் வருந்தி
வேண்டுகின்றோம்.

பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள்

கிராம்புவில் முருகன் கோவிலடி,
சாவகச்சேரி.

(5776.)


St. John's College, Jaffna
and
Chundikuli Girls' College, Jaffna

## ADMISSION - 1989

1) Vacancies exist, ONLY in the following Classes:-
   a) Year ONE and Year SIX (St. John's & Chundikuli Girls'– College).
   b) Year Eight (St John's College Only).
2) Apply:-
   i) On forms available from the respective Schools between 1st September and 14th September, 1988.
   ii) Applications on other forms will Not be considered.
   iii) Forms received after 20th of September will Not be considered.
3) Applications must be accompanied by Birth Certificates. Forms incorrectly, or incompletely filled will be rejected.
4) Application forms can be obtained in person or by post:
   i) In Person: On School days-between 9-00 a. m. and 2-00 p. m. paying Rs. 25/- for a Year ONE Form, and Rs. 50/- for a year SIX and Year EIGHT Form.
   ii) By Post: Send a stamped self addressed long size envelope enclosing Postal Order / Money Order for the respective amounts drawn in favour of the Principal of the respective School.
5) Age Limits:
   i) Year ONE: Applicants should have been born between 01-02-1983 and 31-01-1984.
   ii) Year SIX: Applicants should have been born ON OR AFTER 01-02-1978.
   iii) Year EIGHT: Applicants should have been born ON OR AFTER 01-02-1976
6) Admission Test:
   Year SIX and Year EIGHT: Saturday, the 8th October, 1988, beginning at 8-30 a.m.

— PRINCIPALS.

JAFFNA.
12-08-1988.

(C-6082)



# கருங்கூந்தலே கண்ணுக்குக்கவர்ச்சி




நரை கண்டவுடன் நொடிப்பொழுதில் கருமையாக்கி நிரந்தர இளமைத் தோற்றத்தைப் பெற..

இதோ

# பீகொக்

## கூந்தல் சாயம்

யப்பானிலிருந்துநேரடியாக இறக்குமதி செய்யப்படுகின்றது!

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளத்தொடர்புகொள்ளுங்கள்!

விலைரூபாய் 50/=க்குமேல்

சந்தைப்படுத்துவோர்:

சக்தி (பிறைவேட்) லிமிட்டெட்
S.26.2ம் மாடி, மத்தியகொழும்பு சூப்பர் மார்க்கெட்
கொழும்பு:11
Colombo Central Super Market. Colombo:11

LANKA COMMERCIAL ARTISTS


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**திருமதி பகவதி சோமசுந்தரம்**

(காலஞ்சென்ற
திரு. க. சோமசுந்தரம் மனைவி)
(உணவுக் கட்டுப்பாட்டு இலாகா)

எங்கள் குடும்பத்தின் தலைவியாய், வழிகாட்டியாய், ஒளிவிளக்காய் அன்புடன் வாழ்ந்து திடீரென எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்த எம் அன்புத் தெய்வத்தின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு வேண்டிய உதவிகளைச் செய்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், மலர் வளையம் சாத்தியவர்களுக்கும் (ஷப்ரு, உதயன் நிர்வாகத்தினர், உத்தியோகஸ்தர்கள்) இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு உதவி புரிந்தவர்களுக்கும் ஆழ்ந்த கவலையில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எமது அன்புத்தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். 15 ஆம் திகதி சபிண்டீகரணமும், 19 ஆம் திகதி அந்தியேட்டிக் கிரியையும் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என்றும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,
பிள்ளைகள், மருமக்கள்.

''கணேஸ வாசம்''
சித்தன்கேணி.

(C-6180)

## மூன்றும் ஆண்டு நினைவுதினம்

18-8 1988



மலர்வு 13 6-1930 உதிர்வு 22-8-1985

**அமரர் காசிப்பிள்ளை தம்பாபிள்ளை**

நியாயங்கள் வெளியாகி நாளான பின்
உங்களை யாரென்று உலகத்தார் இனம்
கண்டனர்
சேர் இன்று உயிரோடு இருந்திருந்தால்-
எம்
ஊர் இன்று இவ்வாறு போயிருக்கும்?
இவ்வார்த்தையே எங்கேயும்கேட்கின்றது.
இது போதும் இப்போதைக்கெங்களுக்கு!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்
அன்பு மனைவி: த. நாகலட்சுமியும்
பிள்ளைகளும்.

குறிப்பு. தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்ப முடியவில்லை நண்பர்கள். உறவினர்கள் அனைவரையும் 18- 8 - 1988 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள அன்னாரது 3 ஆம் ஆண்டு திருத்திபத்தில் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்

(5500)


# இலங்கையிலே முதன் முறையாக வட மாகாணத் தண்ணீருக்கேற்ற வகையில் தயாரிக்கப்பட்ட சிறந்த ரக தேயிலை !




**தேநீர் தயாரிக்கும் முறை:**

ஒரு தேக்கரண்டி 'தங்கம் தேயிலை'யை நன்ருகக் கொதித்த ஒரு கோப்பை தண்ணீரில் கலந்து இரண்டு நிமிடத்திற்கு மூடிவைக்கவும்.

நன்ருகக் கலக்கிய பின் மீண்டும் இரண்டு நிமிடத்திற்கு மூடிவைக்கவும். தேயிலையை வடித்த பின் பாலும் சீனியும் அளவுடன் சேர்த்துப் பரிமாறவும்.

ஏக விநியோகஸ்தர்:

**மேடிக்கல் ஹோல்**
224, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்:

**Ceylon Commodity Marketing [Pvt.] Ltd.**
P.O. Box: 640, Colombo,


குறிப்பு: மூவர்ண நிறத்தில் அச்சிடப்பட்டிருக்கும் மேற் காட்டிய எமது வியாபாரச் சின்னம் கொண்ட பைக்கற்றுக்களை அவதானித்து வாங்கவும்.

(C 6113)



# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

**தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.**

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ.

Pfizer

சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Grant BJK&E PFL 1157


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.

**பொருள்:**

மிக்க பொருள்வளம் உடையதாய், எல்லாரும் விரும்பத்தக்கதாய், கேடு இல்லாததாய், மிகுதியாக விளைபொருள் தருவதே நாடாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 / 2073
15-08-1988 க. பெ. இல. 23


## ரெனியும் ஜே. ஆரும்!

சுதந்திரமான, நீதியான பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்பதற்காக நான் உழைப்பேன். அதற்காக நான் வீதிகளில் இறங்கிப் போராடவும் தயங்க மாட்டேன். என்னை அரசு கொன்றாலும் சரி, கொலை செய்தாலும் சரி சுதந்திரத் தேர்தல் கோரி நான் போராடியே தீருவேன்.

இவ்வாறு வீராவேசம் கொண்டுள்ளார் முன்னாள் நிதி அமைச்சர் திரு ரொனி டி மெல்.

பத்துவருடம் தொடர்ந்து வகித்த பதவியை இந்த ஆண்டு ஆரம்பத்தில் அவர் விட்டு விலக நேர்ந்தது. காரணம் பொதுத் தேர்தல் வைக்காது, அரசின் ஆட்சிக் காலத்தை சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நீடித்தது தவறு என்று அவர் குரல் எழுப்பியதே ஆகும்.

இப்போது ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகியதால் தமது எம் பி பதவியையும் உதறித் தள்ளிய நிலையில், சுதந்திரமான தேர்தல் நடத்தவேண்டும் என்ற தமது முந்திய கருத்தை முன் வைத்துப் போராடப் போவதாக அறிவித்திருக்கிறார்.

அவரது எண்ணமும் செயலும் ஒன்றாக இருந்தால் அவருக்கு மக்கள் ஆதரவு கிடைக்கலாம். அதன் மூலம் அவர் ஒரு மக்கள் தலைவனாக உருவாகவும் கூடும். இந்தியாவின் வி. பி. சிங்கைப் போல ...

இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் அவர் நியாயமான கருத்துக்களை சில வேளைகளிலாவது வெளியிட்டு வந்தவர். தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணாது அரசியல் தீர்வு காணவேண்டும் என்று வலியுறுத்தியவர். அரசு தமிழர்களுக்கு எதிராக நடத்திய யுத்தத்தை நிறுத்தாவிடில் இலங்கையின் பொருளாதாரம் படுகுழியில் விழும் என்று எச்சரித்தவர். அர்த்தமற்ற, பிரயோசனம் இல்லாத யுத்தத்தால் பலப்பல கோடி ரூபா வீணாகப் போவதாக எடுத்துக்காட்டியவர். சர்வதேச நாடுகளின் உதவியைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்படும் என்று அரசுக்கு அபாயமணி அடித்து வந்தவர்.

என்றாலும் தென்னிலங்கை அரசியல்வாதி என்ற குணம்சம் அவரிடம் இல்லாமல் இருக்கவில்லை. தமிழர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட உரிமைகளை மட்டுமே வழங்க முடியும் என்று அவர் கூறியதும் உண்டு.

ஆகையால்—

ஓர் அரசியல் தலைவனாகத் தான் மாறிவிட வேண்டும் என்பதற்காக, திரு டி மெல், தமிழர் விடயத்தில் பேரினவாத தீவிரப் போக்கைக் கடைப்பிடிப்பாரா அல்லது நிதானப் போக்கைக் கைக்கொள்வாரா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அது நிற்க.

சுதந்திரமான தேர்தல் வேண்டித் திரு. ரொனி டி மெல் வீதிப் போராட்டம் நடத்தத் திட்டமிடும் அந்த வேளையில் —

பயங்கரவாதம் தொடருமானால் தேர்தலே இல்லாமல் போகலாம் — அதனை நடத்த முடியாமல் போகலாம் — என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

அதாவது சார்க் மாநாட்டை கொழும்பில் நடத்த முடியாமல் போனது போல தேர்தலையும் நடத்த முடியாது போகலாம் என இப்போதே அவலக் குரல் எழுப்பி இருக்கிறார் ஜனாதிபதி.

அரசமைப்புச் சட்டப்படி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்துக்கு முன் ஜனாதிபதித் தேர்தல் நடந்தாக வேண்டும். ஆனால் ஜனாதிபதியின் பேச்சு அதற்குச் சாதகமாக அமையவில்லை.

பயங்கரவாதம் என்ற ஒரு சாட்டைச் சொல்லி தேர்தலை நடத்தாமல் விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதை அவரது பேச்சு பூடகமாகச் சொல்கிறது.

ஆட்சித் தலைவர் தான் நினைத்ததைச் செய்ய வேண்டும் என்று விரும்புபவராக, ஒப்புரவு இல்லாத நடவடிக்கைகளை எடுப்பவராக இருந்தால் நல்லாட்சி பற்றி நினைத்தும் பார்க்க முடியாது. அதுவே இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது. சிங்களவருக்கு ஒரு நீதி, தமிழருக்கு வேறு நீதி, ஆளுங்கட்சியினருக்கு ஒரு நீதி, எதிர்க்கட்சிகளுக்கு ஒரு நீதி என்ற போக்கே தொடர்கிறது.

நாட்டின் ஆட்சித் தலைவரோடு பத்து வருடங்கள் சேர்ந்து பணியாற்றிய திரு. டி மெல், தனது போராட்டத்தில் வெல்வதற்கு என்ன திட்டம் வகுத்துள்ளார் என்பதை இன்னும் அறிவிக்கவில்லை.

ஆகையால் வெற்றி ஜே. ஆர். பக்கமா அல்லது ரெனி பக்கமா என்பதைக் காலமும், மக்களும் தான் சொல்ல வேண்டும்.

ஆப்கன் பிரச்சினையில்

# சோவியத்தின் கையாள் இந்தியா!

## பாகிஸ்தான் அதிபர் ஸியா குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், ஆக 14

ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் சோவியத் யூனியனின் கையாளாக இந்தியா செயல்பட்டு வருவதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது.

பாகிஸ்தான் 'டைம்ஸ்' ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் அதிபர் ஸியா- உல்- ஹக் இக்குற்றச்சாட்டைச் சுமத்தினார். சோவியத் யூனியன் துருப்புக்கள் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆப்கனுக்குள் நுழைந்தது

அன்றில் இருந்து ஜெனிவா உடன்பாடு வரும்வரை வாய்மூடி மௌனியாக இருந்து வந்த இந்தியா, இப்போது ஆப்கன்பிரச்சினை பற்றிப் பேசத் துவங்கி இருக்கிறது. இதற்கு அனுமதிக்க முடியாது.

ஆப்கன் உள்விவகாரத்தில் தலையிட வேண்டாம் என்று நான் இந்தியாவை எச்சரிக்கை செய்கின்றேன்.

இந்தியா தனக்கு அருகில் இன்னொரு இஸ்லாமியக் குடியரசு உதயமாவதை விரும்பாததே இத்தலையீட்டுக்குக் காரணம்.

இப்படி அதிபர் ஸியா பேட்டியில் தெரிவித்தார். (எ)

# சோவியத் துருப்புகளில் அரைப்பங்கினர் ஆப்கனில் இருந்து வாபஸாகினர்!

மாஸ்கோ, ஆக.14

ஆப்கனிஸ்தானில் இருந்து சோவியத் துருப்புகளில் அரைப்பங்கு குறிப்பிட்ட தினத்துக்கு முன்பதாக விலகிக்கொண்டு விட்டன என்று மாஸ்கோவில் அறிவிக்கப்பட்டது.

ஜெனிவா உடன்பாட்டின்படி இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் 50 ஆயிரம் சோவியத் துருப்புகள் ஆப்கனிலிருந்து வெளியேற வேண்டும். அதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பே, சொல்லப்பட்ட சோவியத் துருப்புக்கள் வெளியேறிவிட்டன என்று மாஸ்கோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

எஞ்சிய துருப்புக்கள் அடுத்த ஆண்டு பெப்ரவரிக்கு முன்னர் ஆப்கனிலிருந்து வெளியேற வேண்டும் என்று ஜெனிவா உடன்பாடு கூறுகின்றது. (எ)

### உடன்பாடு

புதுடில்லி, ஆக 14

திரிபுரா மாநிலத்தில் தனிநாடு கோரிப் போராடிய தேசிய தொண்டர் படையுடன் இந்திய அரசு உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளது.

தேசிய அரசியலில் கலந்துகொண்டு உழைக்கப்போவதாக தேசிய தொண்டர் படை அறிவித்து உள்ளது. (எ)

**வெளி உலகில்**

### தென் ஆபிரிக்கா அறிவிப்பு

கேப்டவுன், ஆக. 14

அணுக்குண்டு தயாரிக்கும் வல்லமையைப் பெற்று விட்டதாக தென் ஆபிரிக்க அரசு நேற்று அறிவித்தது.

வெளியுறவு அமைச்சர் பிக் போத்தா இத்தகவலை வெளியிட்டார். (எ)

### கெய்ரோவில் கலவரம்; ஒருவர் பலி

கெய்ரோ, ஆக.14

எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையே பெரும் மோதல் இரண்டாவது நாளாக இடம்பெற்றது.

இதில்ஒருவர் உயிரிழந்தார். பலர் காயம் அடைந்தனர்.

எகிப்து அரசு, முஸ்லிம் தீவிரவாதிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்திருப்பது தெரிந்ததே! (எ)

# ஐ.நா. சமரச யோசனையை போராளிகள் நிராகரிப்பு

ஐ.நா., ஆக 14

மேற்கு சஹாரா பிரதேசத்துக்கு தனிநாடு அந்தஸ்து கோரிப் போராடி வரும் பொலிஸாரியோ போராளிகள் முன்னணி, ஐ.நாவின் சமரச யோசனையை நிராகரித்து விட்டது.

இப்பிரதேசம் மொரொக்கோவின் கட்டுப்பாட்டில் உள்ளது.

தனிநாடு கோரி பொலீஸாரியோ முன்னணி 12 ஆண்டுகளாக போராடி வருகிறது.

ஐ.நா. சமர்ப்பித்த சமரச யோசனை, யுத்த நிறுத்தம் ஏற்பட்டு, அப்பகுதியில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கூறுகின்றது.

''சமரச யோசனையின் உணர்வை மதிக்கிறோம்; ஆனால் யோசனை பூரணமனதாகவில்லை''- என்று பொலீஸாரியோ முன்னணிப் பிரமுகர் தெரிவித்தார்.

திருவான்மியூர்க் கொலைகள்:

# தமிழ்நாட்டு எம். பி லோகசபையில்விவரிப்பு

புதுடில்லி, ஆக 14

திருவான்மியூர் கொலைக்கும் அரசியல் வாதிகளுக்கும் உள்ளதொடர்பு பற்றி புதுடில்லி லோக சபையில் இந்திரா காங்கிரஸ் எம்பிதிரு ஜீவரத்தினம் கடந்த வாரம் பிரஸ்தாபித்தார்.

அவர் அங்கு சொன்னதாவது:-

திருவான்மியூர்க்கொலைகள் தமிழகத்தில் பரபரப்பை உண்டுபண்ணி உள்ளது.

முன்னாள் அமைச்சர்கள், எம் எல். ஏ. க்கள் பொலீஸ் அதிகாரிகள் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர்.

சென்னைக்கு அருகில் இது நிகழ்ந்துள்ளது.

பல பெரிய மனிதர்கள் அங்கு போயிருக்கிறார்கள் பல அமைச்சர்களும் சென்று வந்துள்ளனர். எம்.எல்.ஏக்களும் சென்று வந்துள்ளனர்.

அவர்களைப் பற்றி செய்திகள் விரைவில் வெளிவரும்.

இது யார் நிர்வாகத்தில் ஏற்பட்டது?

—இப்படி இந்திரா காங்கிரஸ் எம்பி திரு. ஜீவரத்தினம் கேட்டார். (உ-எ)

### ஈரான் அமைச்சர் சிரியா விஜயம்

டமாஸ்கஸ், ஆக.14

ஈரான் வெளியுறவு அமைச்சர் வேலாயடி நேற்று சிரியா சென்று ஜனாதிபதி ஆஸாத்தைச் சந்தித்தார்.

வளைகுடா யுத்த நிறுத்தத்தை கொண்டுவருவது தொடர்பாக ஐ. நா. நடத்திய பேச்சுக்களின் விவரங்களை ஈரான் வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதி ஆஸாத்திடம் தெரிவித்தார். (எ)

# 'யேசுநாதர்' திரைப்படத்துக்கு அமெரிக்காவில் எதிர்ப்பு

வாஷிங்டன், ஆக.14

யேசுநாதர் பற்றிய படம் ஒன்று நேற்று அமெரிக்காவில் பல மாநிலங்களில் திரையிடப்பட்ட போது, பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

லொஸ் ஏஞ்சல்ஸ், வாஷிங்டன், நியூயார்க் ஆகிய இடங்களில் உள்ள முக்கிய படமாளிகைகளில் இப்படம் திரையிடப்பட்டது.

அப்போது ஆயிரக்கணக்கான ரசிகர்கள் படமாளிகை முன் திரண்டு நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இப்படம் அடுத்த மாதம் வெனிஸில் நடைபெறவுள்ள உலக திரைப்படவிழாவில் திரையிடப்படவுள்ளது. அதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யேசுநாதரின் கனவுக் காட்சி ஒன்று ஆட்சேபகரமான முறையில் படமாக்கப்பட்டுள்ளதாகக் கண்டனம் தெரிவிக்கப் படுகிறது. (எ)

### பொம்மை பதவி ஏற்பு

பெங்களூர், ஆக.14

கர்நாடக முதலமைச்சராக திரு. எஸ். ஆர். பொம்மை நேற்று ஆளுநர் வெங்கட சுப்பையா முன் பதவிப்பிரமாணஞ் செய்துகொண்டார்.

திரு. ஹெக்டேயின் அமைச்சரவையில் வருவாய்த்துறை அமைச்சராக திரு. பொம்மை முன்னர் பணியாற்றினார். (எ)

### கரவெட்டி புனித மரியன்னை உற்சவம்

யாழ்ப்பாணம், ஆக 15

கரவெட்டி புனித மரியன்னையின் ஆலய வருடாந்த உற்சவம் இன்று நடைபெறுகிறது.

இன்று காலை 7மணிக்கு திருநாள் பலிப்பூசையும், மாலை 4 மணிக்கு திருச்சுரூப பவனியும் இடம் பெறும். (இ-9)

### தெல்லிப்பழை துர்க்காதேவி கொடியேற்றம்

சுன்னாகம், ஆக 15

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை பூர்வபட்சமும் பூரநட்சத்திரமும் கூடிய நலவேளையில் மு. ப 11-00 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

பன்னிரண்டு நாட்கள் தொடர்ச்சியாக திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

எட்டாம் நாள் செவ்வாய்க்கிழமை பி. ப 3-00 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், மறுநாள் மாலை 6-00 மணிக்கு சப்பறத்திருவிழவும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 3-00 மணிக்கு ஆவணித்திருவோணத்தில் துர்க்காதேவி அழகிய திருக்கோலத்தில் ''துர்க்கா துஷ்டரணி'' தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தமாடுவாள்.

மறுநாள் பிராயச்சித்த அபிஷேகமும் 27 ஆம் திகதி சனிக்கிழமை வைரவர் பொங்கலும் நடைபெறும். (இ-68-27)

### செல்வச் சந்நிதி உற்சவம்

செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

பாதுகாப்பு நடவடிக்கையில் அமைதிப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

ஆலயத்தின் தெற்குப் பகுதியில் அமைதிப்படையினர் மீண்டும் முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். (ஒ-160)

### ரெனிக்கு உள்ள கவலை

கொழும்பு, ஆக 15

சுதந்திரமே! உனது பெயரில் என்ன என்ன குற்றங்களை எல்லாம் செய்கிறார்கள்.

ஜனநாயகமே! உனது பெயரில் எவ்வளவு பெரிய குற்றங்களைச் செய்கிறார்கள்.

இதைத்தான் என்னால் கூற முடியும் என்று சொன்னார் முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல்.

கோரமின்மையால் நாடாளுமன்றத்தில் பிரியாவிடை உரைநிகழ்த்த முடியாமற் போன சம்பவம் பற்றி செய்தியாளர் மத்தியில் தெரிவித்த போது திரு டி. மெல் இப்படிக் கூறினார்.

எதுல் கோட்டே என்னுமிடத்தில் திரு டி. மெல்லுக்கு அளித்த வரவேற்பு வைபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா, மகரகம எம்பி தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-எ)

### மடுப்பதியில்...,

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைந்து, தேவாமிர்தத்தை நுகர்ந்த யாத்திரிகர்கள் மாதாவின் பாதத்திலமர்ந்து அவரின் முகத்தில் பூத்த புன்னகையையும் பருகியிருக்கிறார்கள். திருத்தரிசனையடைந்திருக்கிறார்கள். கவலை குறுக்கிடாத பேரின்பம் பொலிந்த நாட்கள் இந்நாட்கள் ஆயினும் பிரிய வேண்டும். ஆகையால் அதற்கு முன் கடைசியாய் ஒரு செபமாலை சொல்லிக் கடைசி நேர்த்தி செலுத்தி [illegible] ஒரு முறை தரிசித்து

''திரும்பி வர வரந்தாரும்'' என்று சொல்லி விடைபெற்று தாம் வந்த காரிலோ வேறு வாகனத்திலோ ஏறுவார்கள் வாகனங்களை ஒரு குரவர் ஆசிர்வதிப்பர். எல்லோரும் புறப்பட ஆயத்தம் கண்களில நீர் பெருகும். பெருமூச்செழும். செபமாலைகள் கழுத்தில் தொங்கும். சிறுவர் ''ஆவே ஆவே'' என்று கீதம் பாடத் தொடங்குவர். இக்கீதத் தாளத்துடன் இசைய வாகனம் ஆடிநகரும்; ஆயினும் மக்களின் இருதயம் மடுமாதாவின் [illegible] இருக்கும்.

திருமலை கச்சேரி விவகாரம்

# அரசின் பயமுறுத்தல் குறித்து ஊழியர் கூடி ஆராய்ந்தனர்

திருகோணமலை, ஆக 15

திருகோணமலைக் கச்சேரியில் கடமைபுரியும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் 11 ஆம் திகதி முதல் வேலைக்குத் திரும்ப வேண்டும் என்று தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் அறிவிக்கப்பட்டதை அடுத்து கடந்த 10 ஆம் திகதி கூடி இதுபற்றி ஆராய்ந்தனர்.

புதிதாக உருவாக்கப்பட்ட அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் ஒன்றியத்தின் குழுவினர் முன்னிலையில் இந்தக் கலந்துரையாடல் சமூக சேவை நிலையத்தில் இடம் பெற்றது.

கூட்டத்துக்கு ஒன்றியத்தின் தலைவர் திரு. ரி. தவசிலிங்கம் தலைமை வகித்தார்.

இரண்டு மணித்தியாலக் கலந்துரையாடலின் பின்னர் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

★ உள்ளூராட்சி அமைச்சர் 15 ஆம் திகதி (இன்று) வரும் போது அவரைச் சந்திப்பதற்கு அனுமதி கோருதல்.

★ ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் கூறப்பட்ட இரண்டு கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்தல்.

★ இராணுவ நிர்ப்பந்தத்தின் மூலம் பலாத்காரமாக ஊழியர்களை வேலைக்கு அழைத்துச் செல்வதைக்கண்டித்தல்.

★ ஊழியர்கள் வசமிருக்கும் திறப்புகளை, உரிய முறையில் அமைதிப்படையினரின் முன்னிலையில் வைத்துக் கையளித்தல்.

★ 15 ஆம் திகதி (இன்று) கச்சேரியில் கூட இருக்கும் அதிகாரிகளின் கூட்டத்தைக் கோட்டைக்கு வெளியே நடத்தக் கோருவது.

★ ஏற்கனவே எடுத்த தீர்மானத்திற்கு அமைய அங்கத்தவர்கள் நடந்து கொள்வது. (இ-150)

### சந்தைக்கு வந்த மக்கள் அவதி

கொடிகாமம் ஆக 15

கடந்த 11 வருடங்களாக கட்டடங்கள் முற்றுப் பெறுதிருக்கும் கொடிகாமம் சந்தையில் வெள்ளிக்கிழமை பெய்த பெருமழையால் பாவனையாளர்கள் பெரும் கஷ்டமடைந்தனர். (இ-75)

### விசர்நாய் தடுப்பூசி போடும்நிலையங்கள்

கோப்பாய் ஆக 15

கோப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் 17ஆம் 18 ஆம் திகதிகளில் பின்வரும் நிலையங்களில் நாய்களுக்கு விசர் நாய் தடுப்பூசி போடப்படும்.

17 ஆம் திகதி காலை பூதர்மடம் பாடசாலை சரவணபவானந்த வித்தியாசாலை, நண்பகல் கூசையப்ப சோவிலடி, பிள்ளையார் கோவில், மாலை கோப்பாய் தெற்கு.

18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை இருபாலை முனி கோவில்,

நண்பகல் யூ.பி.எஸ் விளையாட்டு மைதானம்.

மாலை கலைமணி சனசமூக நிலையம்ஞானபாஸ்கரோதயசங்கம் (சி-72)

சிறையில் இறந்த மகனுக்காக

# ரூ. 8 லட்சம் நஷ்ட ஈடு கோருகிறார் தாயார்

கொழும்பு, ஆக 15

சிறையில் மரணமடைந்த விளக்கமறியல் கைதி ஒருவரின் தாயார் எட்டு லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி சிறைச்சாலை ஆணையாளருக்கு சட்டத்தரணி மூலம் நோட்டீஸ் அனுப்பி வைத்திருக்கிறார்.

மக்கள் வங்கித் தலைவர் டாக்டர் எஸ். ரி.ஜி. பெர்னாண்டோவை கொலை செய்ய முயற்சித்த சம்பவம் தொடர்பாக நோயல் அமரசிங்க என்பவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சிறையில் வைத்து அவரை வேறு நான்கு கைதிகள் கடந்த ஜூன் 6 ஆம் திகதி கத்தியால் குத்திக் கொலை செய்து விட்டார்கள்.

உயிரிழந்த சந்தேக நபரின் தாயாரே தற்போது நஷ்டஈடு கோரி இருக்கிறார். (இ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**C. S. K. சீயாக்காய் பவுடர்**

இது சீயாக்காய் வெந்தயம், பயறு, பச்சையரிசி ஆகிய நாலு இயற்கைப் பொருள்கள் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. கூந்தலில் உள்ள அழுக்கைப் போக்கி கூந்தலை அடர்த்தியாகவும் ஆரோக்கியமாகவும் கருமையாகவும் வளரச் செய்கிறது.

க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
5 (76), பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

15 - 08 - 1988 திங்கட்கிழமை

**கைலாஸ் கருவேலன் பற்பொடி**

இது மரசு கரைதல் பல்வலி பல் அரணை வாய் நாற்றம் பல் ஆட்டம் போன்ற பல் வியாதிகளுக்குச் சிறந்தது

**கைலாஸ் கருபற்பொடி**

இப்பற்பொடி தினமும் பாவித்தால் பல்வலி, பல் அரணை, வாய்நாற்றம் பல சிழ் வடிதல், மதலிய தந்த வியாதி களைக் குணப்படுத்தும்.

க செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
5 (76), பெரியகடை, யாழ்ப்பாணம்.

## ஒத்திவைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 15

அதிபர்களுக்கான தேர்வுப் பரீட்சை விண்ணப்பத் திகதியை வடக்குக் கிழக்கு மாகாண ஆசிரியர்களின் நன்மை கருதி 1988 செப்டெம்பர் 15 ஆம் திகதிக்கு பிற்போடுமாறு கல்விச் சேவை ஆணைக்குழுவையும், பரீட்சை ஆணையாளரையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கோரியுள்ளார். (ஓ)

## ஆசிரியர் தேவை

க. பொ. த. (உ . த)
வகுப்பு மாணவர்க்கு

அளவையியல்
விலங்கியல்

போதிப்பதற்கான ஆசிரியர்கள் தேவை. தகுதியானவர்கள் 22- 08- 1988ம் திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் அதிபர், யாழ் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

செயலாளர்

யாழ். இந்துக் கல்லூரி,
(பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

(C6208)

✲ எமது புதிய வெளியீடு ✲

உஷா சினிமா

K.பாக்கியராஜின்

**- இது நம்ம ஆளு -**

(ஒரிஜினல் பிரதி)

RECORDING ஒடருக்குத்
தொடர்பு கொள்ளுங்கள்

162, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(5740)

எமது நேற்றைய
புதிய வெளியீடு

ராமராஜன், சபிதா, ஆனந்த்,
S. S. சந்திரன், செந்தில்

**என்னை விட்டுப் போகாதே**

**குணம்** வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C 6210)

**A. A. T.**
OF
SRI LANKA

**Stage I and Stage II**

**Week Day Classes Commencing**
ON
**18th August 1988**

**North Ceylon Technical Institute**
14, St. PETER'S LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.

(C 6111)

வழமைபோல் இம்முறையும்

## நல்லூர்த் திருவிழா காலத்தில் "பரியர்கள்"

யாழ்ப்பாணம், ஆக.15

நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகும் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தின்போது வருடாந்தம் போக்குவரத்து தடைகள் ("பரியர்கள்") ஏற்படுத்துவதுபோலவே இம்முறையும் அவை ஏற்படுத்தப்படும்.

இதன்படி பருத்தித்துறை வீதி அரசடிச் சந்தியில் ஒரு தடையும் 2 ஆம் கட்டையில் மற்றத் தடையும் அமையும்.

கோவில் வீதி சங்கிலியன் வீதிச் சந்திக்கு அண்மையில் ஒரு தடையும், பிராமணக்கட்டுக் குளம் சந்திக்கு அண்மையில் மற்றத்தடையும் அமையும்.

*செட்டித்தெரு - செட்டித்தெரு ஒழுங்கைக்கு அண்மையில் ஒரு தடையும் ஏற்படுத்தப்படும்

எதிர்வரும் 17 ஆம் திகதி அதிகாலை 12 மணி முதல் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிவரை இந்தத் தடைகள் இருக்கும்.

இதேவேளை நல்லூர் வருடாந்த உற்சவ காலங்களில் யாழ். மாநகர எல்லைக்குள் ஊரடங்குச் சட்டம் இரவு 9மணி வரை தளர்த்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-க)

## ஆரம்ப...

1ம் பக்கத் தொடர்ச்சி)

பாலாருக்கும் யாழ் கனகரத்தினம் மக வித்தியாலயமும், எஞ்சிய பெண் பயிற்சியினருக்கு சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை, வேம்படி மகளிர் கல்லூரி என்பனவும் ஆண் பயிற்சியினருக்கு சென்பற்றிக்ஸ் கல்லூரியும் என்று அனுமதிக்கப்பட்டுள்ளன.

இதில் யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கும், வேம்படி மகளிர் கல்லூரிக்கும் பயிற்சியினர் முழு அளவில் ஒதுக்கப்பட்டுவிட்டனர்.

எனவே இன்று நடைபெறும் யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய், கோப்பாய், சாவகச்சேரி ஆகிய தொகுதியினருக்கான பதிவின்போது நேற்று எஞ்சிய பாடசாலைகளுக்கும் இதுவரை பயிற்சியினர் அனுமதிக்கப்படாத சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றிற்குமே பயிற்சியினர் அனுமதிக்கப்பட உள்ளனர். (ஓ-9)

## படகுப்...,

(1ஆம் பக்கதொடர்ச்சி)

டாடப்படாத 35 சாராயப் போத்தல்களைக் கைப்பற்றினர். அவற்றில் சிலவற்றைச் சாராயப் பிரியர்களுக்கு அங்கேயே வைத்துக் குடிக்கக் கொடுத்துவிட்டு, மிகுதியை உடைத்துக் கடலுடன் கரைத்துவிட்டனர். (அ-111)

## ஆசிரியர்...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

த. மகாசிவம் எடுத்துக் கூறுகையில்-

மிகவிரைவாக- அநேகமாக 3. ஆம் தவணை முற்பகுதியில் வேலை இழந்த ஆசிரியர்கள் அனைவரும் மீளவும் வேலைக்கு அமர்த்தப்பட்டு விடுவார்கள்- என்று நம்பிக்கை தெரிவித்தார்.

## தென்----

(1-ம பக்கத்தொடர்ச்சி)

பகுதியிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் லொறி மற்றும் வாகன உரிமையாளர்களிடம் வவுனியாவுக்கு அப்பால் வைத்து இனந்தெரியாத சிலர், ஹர்த்தால் தொடர்பாக நேரில் அறியத்தந்ததாகவும் —

அந்நாட்களில் வவுனியாவுக்கு அப்பால் வாகனங்கள் வரக்கூடாது என எச்சரிக்கப்படுவதாகவும் அறிய வந்தது.

இது நிற்க, 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் இந்தக் ஹர்த்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மற்றொரு தகவல் கூறுகிறது (ஓ-எ-9-10)

## யாழ்....,

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சொகுசு பஸ் லை வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அனுப்பி வைக்குமாறு போக்குவரத்து அமைச்சருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை அடுத்த மாதம் அளவில் யாழ் - கொழும்பு பஸ்சேவைகள் ஆரம்பிக்கப்படலாம் என வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் நம்பிக்கை தெரிவித்தார். (ஓ-10)

## வர்த்தக---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடைகளும் மூடப்பட்டு ஊழியர்களுக்கு வாராந்த ஓய்வுநாள் வழங்கப்பட்டது.

இதேபோல்ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் கடைகள் மூடப்பட்டு ஊழியர்களுக்கு ஓய்வுநாள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று கடைகளை மூடி, ஊழியர்களுக்கு ஓய்வு வழங்கியதற்கு யாழ்- மாநகர வர்த்தக ஊழியர் சங்கம், யாழ்- வர்த்தகர் சங்கத்துக்கும், வர்த்தகப் பிரமுகர்களுக்கும் நன்றி தெரிவித்து அறிக்கைஒன்றை வெளியிட்டது. (ஓ-10)

## விமானம் நோட்டம்

முல்லைத்தீவு, வவுனியா வடக்கு பகுதிகளில் உள்ள காடுகளை இரவு நேரங்களில் போக்கஸ் லைற் பொருத்தப்பட்ட விமானம் தாழப்பறந்து நோட்டமிட்டுக் கவனிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஓ-113

## காரைநகர் முகாமிலிருந்து ஷெல் வீச்சு

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து மாலை வேளைகளில் வானத்தை நோக்கி துப்பாக்கிப்பிரயோகமும் பீரங்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை கடந்த சனிக்கிழமை இரவு ஷெல் வீச்சும் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. அவை காரைநகர் மேற்கில் குடிசனப் பகுதியில் வந்து வீழ்ந்து சில வீடுகளின் கூரைகள் சேதமாகின.

இத் திடீர் மாற்றத்தால் இப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்துள்ளனர். (ஓ-73)

## நாளை கொடிச்சீலை ஒப்படைக்கப்படும்

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த கொடியேற்ற உற்சவத்துக்கு செங்குந்த மரபினரால் வழங்கப்பட்டு வரும் கொடிச்சீலை, நாளை (செவ்வாய்க்கிழமை) காலை சட்டநாதர் வீதியில் உள்ள வேல் முருகன் ஆலயத்தில் இருந்து அழகிய சித்திரத் தேரில் எடுத்துச் செல்லப்பட்டு நல்லைக் கந்தன் ஆலயத்தில் ஒப்படைக்கப்படும். (ஓ-எ)

## நல்லையா காலமானர்

கொழும்பு, ஆக 15

ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகர் திரு. ஆர்.ஆர். நல்லையா நேற்றுக் காலமானர்.

64 வயதான இவர் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகக் கடந்த பத்து வருடங்களாகப் பணியாற்றிவந்தார்.

இவர் யாழ்ப்பாணத்தின் முன்னுள் மேயர்களில் ஒருவரான திரு. ஆர். ஆர். நல்லையாவின் புதல்வராவார். (அ)

## காமினி----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

காமினி திஸநாயக, லலித் அத்துலத்முதலி ஆகியோரிடம் முன்வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

திரு. பிரேமதாஸா ஜனதிபதியானல், திரு. காமினி திஸநாயகா உப ஜனதிபதியாகவும் —

திரு. லலித் அத்துலத்முதலி பிரதம மந்திரியாகவும் நியமிக்கப்படுவர் என்பதே அந்த மாற்றுத்திட்டமாம்.

உப ஜனதிபதி பதவி உருவாக்கப்படாவிட்டால் உப பிரதமர் பதவி உருவாக்கப்படக்கூடும் சாத்தியமும் உண்டு என்று தெரிகிறது.

இதேவேளை,ஜனதிபதி வேட்பாளர், செயற்குழுவினல் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று அமைச்சர் லலித் அத்துலத்முதலி கோரியுள்ளார். (ஓ-எ)

## லெபனுனுக்கு புதிய அதிபர்

பேருட். ஆக 14

லெபனன் நாடாளுமன்றம் அடுத்த வியாழக்கிழமை கூடுகிறது. புதிய ஜனதிபதி ஒருவர் அன்று தெரிவு செய்யப்படுவார்.

## சீட்டிழுப்பு முடிவுகள்

மானிப்பாய் புனித அன்னுள் ஆலய கட்டட நிதிக்காக 14. 8. 88 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பின் முடிவுகள்:

1-ம் பரிசு இல. 5637 சி. அன்ரன்
14 3-ம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணம்.

2-ம் பரிசு இல. 3634 எஸ். இராசநாயகம்
ஆனைக்கோட்டை.

3-ம் பரிசு 1446 எம். வயனு
T. C றேட், மானிப்பாய்

4-ம் பரிசு 5024 பிறேம்குமார்
உரும்பராய்.

5 ம் பரிசு 1172 க. ஆனந்தம்
கூளாவடி, ஆனைக்கோட்டை

6-ம் பரிசு 3765 திருக்குடும்ப கன்னியர் மடம், மானிப்பாய்.

பரிசுகளைப் புனித அந்தோனியர் ஆலய குருமனையில் பெற்றுக் கொள்ளலாம் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றி

பங்குத் தந்தை,புனித அன்னுள் ஆலயம்,
(5781) மானிப்பாய்

## 111ஆம் நாள் நினைவுச்சுடர்



செல்வன்
**வைத்தியலிங்கம் உதயகுமரன்**
(ரமேஸ்)
(சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பொறுப்பாளர் நான்குவருடம் (D. O) நல்லூர்)

அன்னை மடியில்: **28- 08 - 1965**
அவனியில் அழிப்பு: **28- 04- 1988**

எங்கள் அணையா விளக்கே! எங்கள் அன்பான சுடர் ஒளியே! எல்லோருக்கும் இரக்கம் உள்ளவனாக கையிலாச பிள்ளையார் மக்கள் போற்றிப் புகழ்ந்திடவே தொண்டு செய்தாய்! உன் அருமைச் சகோதரர் ஒளி வீசச் செய்யும் வேளையில் பாவிகள் பதை பதைக்கக் கொன்றனரே! அன்பான ராசா! அறிவான சுடர்ஒளி ஐயா! தாய், சகோதரர்களைத் தவிக்கவிட்டு எங்கு ஓடி மறைந்தாய் ஐயா!

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துன்புறும்;
அருமை அம்மா, அன்பான
அண்ணன்மார்கள், அண்ணிமார்கள்,
பெருமகன்.

(5739)

# மரண அறிவித்தல்கள்

## திரு. சில்வெஸ்டர்-டேனிஸ்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

திரு. சில்வெஸ்டர்- டெனிஸ் காலமானர். இவர் சுகிர்தத்தின் அருமைக் கணவரும், ஜோ (U. K), றெக்ஸ் (U. K), அநந்ததி (முன்னுள் ஆசிரியை St. Bridget's), அன்ரன் (Australia), ஜெனி (முன்னுள் ஊழியர் Ceylon Cold Stores), சாவித்திரி (மாணவி Holy Family Convent) ஆகியோரின் அன்புத் தந்தையும், அல்பிரட் (U.K), காலஞ்சென்ற திருமதி லீன் பெனடிக்ற், றெஜி, மகாராஜா, தேவராஜா, ஆனந்தராஜா, அச்சில், சோதி ஆகியோரின் நேச சகோதரனும், ஜெரூட், (The Finance), மஞ்சுளா (U. K) ஆகியோரின் மாமனுருமாவார். மரணச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

42/4 கோவில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(5743)

## திருமதி புஸ்பவதி சிவசுப்பிரமணியம்

திருமதி புஸ்பவதி சிவசுப்பிரமணியம் காலமாகி விட்டார். இவர் சிவசுப்பிரமணியத்தின் (Draftsman Buildings Dept, Jaffna) அன்பு மனைவியும், ஜெயந்தி (Germany), ஆனந்தி (Germany), சுகந்தி (Germany.) ரஜனியின் அன்புத்தாயாரும் செல்வராசா (Germany), மோகனதாஸ் (Germany), ஆகியோரின் மாமியாரும் பகிரதி, ரோஷானி ஆகியோரின் அன்புப் பத்தியும், குணரெத்தினம் (Linga Exports Colombo), கமலாவதி (Germany), பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனோரஞ்சிதம் செல்வராசா (கனடா) சண்முகரெத்தினம் ராஜேந்திரன் (Swiss) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னரின் பூதவுடல் 15-8-88, 3மணியவில் 230 சட்டநாதர் றேட் இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறும் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
சிவசுப்பிரமணியம்,
230, சட்டநாதர் றேட்
நல்லூர். (5744)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ளஅவர்களது அச்சகத்தில் 15 08 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 15 th August 1988.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org